# ஒரு முற்றிலுமானது

## AN ABSOLUTE

## 63-12-01M

**உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# ஒரு முற்றிலுமானது

இந்தச் செய்தியானது ஏழாம் தூதன் (வெளி. 10:7) சகோதரன். வில்லியம் மரியன் பிரன்ஹாம் அவர்களால் 1963-ம் வருடம், டிசம்பர் மாதம், 01-ம் தேதி ஷீரிவ்போர்ட், லூசியானா, அமெரிக்காவில் பிரசங்கிக்கப்பட்ட இந்தச் செய்தியானது ஒலிநாடா ஒலிப்பதிவிலிருந்து அச்சிடப் பட்ட ஆங்கில புத்தகத்திருந்து ஏட்டிதழின் பக்கத்திற்கு சொல் வடிவமான செய்தியாக மாற்ற ஒவ்வொரு முயற்சியும் துல்லியமாக செய்யப்பட்டு, இப்புத்தகம் முழுமையாக அச்சிடப்பட்டு, **Word of Life Ministry** மூலமாக இலவசமாக விநியோகிக்கப் படுகின்றது.


**வெளியிடப்பட்டது: டிசம்பர் 2025**

**WORD OF LIFE MINISTRY**

Coimbatore, Tamil Nadu,

South India.

Phone: 9047268278 / 9487972418

Web: www.wordoflife.in

# ஒரு முற்றிலுமானது

## AN ABSOLUTE

## 63-12-01M

அது உங்களுக்கு ஏதோ ஒன்றை செய்ய வில்லையா? அது நிச்சயமாக செய்கிறது. நாம் இப்பொழுது ஜெபத்தில் தலை வணங்குவோமாக.

2. கர்த்தாவே இந்த இனிமையான பாடலில், நீர் எவ்வளவு மகத்தானவராயிருக்கிறீர் என்று எங்களுக்கு உணர்த்தியது போல, நீர் மட்டும் இல்லையென்றால் நாங்கள் என்ன செய்திருப்போம் என்று இந்தக் காலை வேளையிலே நாங்கள் நினைக்கிறோம்!. மேலும், நீர் மிகவும் மகத்தானவராயிருக்கிறீர் என்று நாங்கள் நினைக்கும்போது, எங்களைக் குறித்து சிந்தையுடைய வராய் இருக்கும்படியாக அந்த அன்பு உம்மை வருந்தி இழுத்தது. ஆகவே, என் ஆத்துமா அதை அரிதான காரியமாக ஏற்றுக்கொள்ளும். அது உண்மைதான். நீர் இன்றைக்கு எங்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்றும், இப்பொழுது நாங்கள் தொடர்ந்து ஆராதனைக்குள்ளாக செல்லுகிறதான வேளையில் இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடாகிய ஜீவ அப்பத்தை நீர் தாமே எங்களுக்குப் பிட்டுத் தருவீர் என்றும், நான் ஜெபிக் கிறேன். இதை நாங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

3. சகோதரன் உங்ரன் இந்தக் கூடாரத்திற்கு தொடர்ந்து வருபவர். மேலும், அவர் டென்னஸ்ஸியில் உள்ள மெம்பிஸில் அவரும், அவருடைய தாயாரும், அவருடைய மனைவியும் வசிக்கிறார்கள். மேலும், அந்த முழுக்குடும்பமும் இந்தக் கூடாரத்திற்கு கடந்து வருகிறார்

கள். மேலும், அவர் பேசுகிறதை நான் மிகவும் அரிதா கவே கேட்டிருக்கிறேன். ஏனென்றால், அது எப்பொழு தும் மிகவும் பரபரப்பாக இருக்கும். ஆனால், இந்தக் காலை வேளையிலே, அவர் இந்தப்பாடலை பாடுவதைக் கேட்க வேண்டும் என்று நான் தீர்மானித்திருந்தேன். அவர் வேறு ஒரு பாடலைக் கூட பாடுவார். அது எனக்கு மிகவும் பிடித்த பாடல், “தம்முடைய மகிமை யிலிருந்து கீழே இறங்கி வந்தார்” என்ற பாடல். அவை எனக்கு மிகவும் பிடித்தமான பாடல்கள். மேலும், இந்தக் காலை வேளையில் அவருடைய தந்தையை சந்திக்கும் படியான மிகப்பெரிய சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. முதல் முறையாக அவரைச் சந்திக்க ஒரு சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர் ஒரு நல்ல மனிதன். மேலும், சகோதரன் உங்ரன், அவருடைய தகப்பனார், அவருடைய மகன் உயிரோடிருக்கும் வரைக்கும் அவர் எங்கேயும் போகப் போவதில்லை, மோரிஸ், ஏனென்றால், அவர்கள் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக இருக்கிறார்கள்.

4. அவருடைய மனைவி, சகோதரன் மோரிஸ், உங்ரனின் தாயார் கடந்த பதினைந்து வருடங்களாக தேவனுடைய கிருபையினால் ஜீவித்திருக்கிறார்கள். அவர்கள் உண்மையாகவே எனக்கு ஒரு மிகப்பெரிய உற்சாகமூட்டுதலாக இருந்தார்கள். அதாவது, அவர் களுக்கு ஏற்பட்டிருந்த அந்த துன்பமான நேரங்களில் அதற்குள்ளாக அவர்கள் கடந்து சென்றபோதும் தேவனுடைய மாறாத கரத்தை அவர்கள் பற்றிக் கொண்டதை பார்க்கும் பொழுது, அது கிறிஸ்தவத்தின் அசலான தன்மையையும், அதை விசுவாசிக்கிறவர் களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்திக் காட்டுகிற தாகவும் இருக்கிறது. ஆகவே, அதற்காக இந்தக் காலை

வேளையில் நான் மிகவும் மகிழ்ச்சி உள்ளவனாக இருக்கிறேன்.

5. நாங்கள் இப்பொழுது தான் கீழ்தளத்தில் ஒரு விவாகம் நடத்தினோம். என்னுடைய இரண்டு பிள்ளைகள் விவாகம் செய்து கொண்டனர், இந்த கூடாரத்தைச் சேர்ந்த என்னுடைய பிள்ளைகள்; நம்முடைய சிறிய பில்லி சிம்சன் மற்றும் சிறிய மையர்ஸ் பெண், அவர்கள் சில காலம் இனிமையான காதலர்களாய் இருந்தார்கள்; ஷாரோல், ஆம். அவர்கள் இருந்தார்கள்... மேலும், அவர்கள் இங்கே உறவினர்களாகவும் இருக்கிறார்கள் அல்லது அந்த சிறிய ஷாரோல் மையர்ஸ், சகோதரன் உங்ரன் மற்றும் அவர்களுடைய உறவினவளாய் இருக்கிறாள். எனவே, அவர்களுக்காக நாம் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம், அவர்கள் தங்களுடைய பொறுப்புகளை எடுத்துக் கொண்டதை நான் காண்கிறேன். விவாகம் செய்து கொண்ட பிறகு, சபையின் அரங்கத்திற்குள்ளாக கடந்து சென்று, அங்கே உட்கார்ந்து, ஆராதனைக்கு செவிகொடுக்க அவர்கள் தங்களுடைய இடங்களை எடுத்துக் கொண்டதை நான் காண்கிறேன். அந்தப் பிள்ளைகளுக்கு எப்பொழுதுமே என் இருதயத்தின் ஆழத்தில் ஒரு இடம் இருக்கிறது. ஏனென்றால், அவர்கள் எப்பொழுதுமே வார்த்தைக்கு மிகவும் மதிப்பு கொடுப்பவர்கள். அவர்கள் வார்த்தையை அப்படியாக நேசிக்கிறார்கள். நான் அவர்களை என் பிள்ளைகள் என்று அழைத்த காரணத்தால் அவர்கள் மற்ற எந்த பிள்ளைகளைக் காட்டிலும் சிறந்தவர்கள் என்ற அர்த்தத்தில் நான் சொல்லவில்லை. ஆனால், அவர்கள் என்னை நோக்கிப் பார்க்கிறார்கள், நான் அவர்களுக்காக தேவனை நோக்கிப் பார்க்கிறேன்.

6. சிறிய பில்லி திருமணம் செய்து கொள்ள விரும்பி னான், அதன் பிறகு அவனுக்கு பயம் வந்துவிட்டது. ஏனென்றால், அவன் ராணுவத்துக்கு செல்ல வேண்டிய வனாய் இருந்தான். மேலும், இரண்டு அல்லது மூன்று பேர் அதே நிலையில் இருந்தார்கள். ஆகவே, அந்தப் பையன்கள் என்னிடம் வந்து “சகோதரன் பிரன்ஹாம் நாங்கள் கடமை தவறுகிறவர்களாகவோ அல்லது வேறு ஏதாவதாகவோ இருக்க விரும்பவில்லை. ஆனால், எங்களுக்காக நீர் தேவனிடத்தில் இதைக் குறித்து கேட்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்” என்றார்கள். மேலும், அவர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தையும் என்னிடத்தில் சொல்லிவிட்டார்கள். அதாவது அவர்கள் முடிந்த அளவுக்கு ராணுவத்தில் சேர்வதில் இருந்து விலகியிருக்க விரும்புகிறார்கள். தங்களால் முடிந்த ஏதோ ஒன்றை செய்து தேசத்தை காப்பாற்றக் கூடாது என்கிற எண்ணத்தினால் அல்ல. ஆனால், அங்கே காரியம் என்னவென்றால், அவர்கள் அங்கே போனால் அவர்கள் அங்கே இருக்கிறதான தவறான ஜனங்களின் மத்தியில் சேர வேண்டியதாய் இருக்கும், (இப்பொழுது நீங்கள் அதை என்னவென்று அழைக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை) பிஎக்ஸ் அல்லது வேறு ஏதோ என்று நீங்கள் அதை அழைக்கிறீர்கள். [பிஎக்ஸ் (px) என்பது அமெரிக்காவில் உள்ள “போஸ்ட் எக்ஸ்சேஞ்ச்” என்கிற ஒரு கடை அமைப்பு. ராணுவத்தில் பணியாற்றுகிறவர் களுக்கான விசேஷித்த கடை, அவர்களுக்கு தேவையான அனைத்து பொருட்களும் அங்கு கிடைக்கும்] அங்கே அவர்கள் செல்லும் பொழுது, அங்கே அரை நிர்வாண பெண்கள் உலாவிக்கொண்டிருப் பார்கள். அது ஒரு கிறிஸ்துவப் பையனுக்கான இடமல்ல,

எனவே தேவன் அவர்களுடைய வேண்டுதலின்படி செய்தருளினார்.

7. மேலும், இப்பொழுது சிறிய பில்லி இந்தக் காலை வேளையில் இந்த அருமையான சிறிய ஷாரோலுடன் மணந்து கொள்ளும்படியாக வந்திருக்கிறார். எனவே நாங்கள் அவர்களுக்காக மகிழ்ச்சியடைகிறோம். மேலும், தேவனுடைய ராஜ்யத்தில் அவர்களுக்கு நன்மையான காரியம் நடக்க வேண்டும் என்று நாங்கள் அவர்களை வாழ்த்துகிறோம்.

8. மேலும் இப்பொழுது இது ஒரு மகத்தான நேரமாக நமக்கு இருக்கிறது. நாம் இன்று காலை மிக அருமை யான ஞாயிறு பள்ளி வகுப்பைப் பெற்றிருந்தோம். ஒரு நிரம்பி வழிகிற சபையாக. எனவே, நாம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். மேலும் ஊழியக்காரர்களே, அநேக சமயங்களில், ஜனங்கள் உங்கள் செய்தியை கேட்கக் கூடி வரும்பொழுது, அது உங்களை உற்சாகப் படுத்துகிறது. ஏனென்றால், நீங்கள் அவர்களைப் பார்க்கும்பொழுது உங்களுக்கு உற்சாகம் பிறக்கிறது. ஏனென்றால், காலியான இருக்கைகளுக்குப் பிரசங்கம் செய்ய நீங்கள் விரும்புவதில்லை. ஏனென்றால் அங்கே ஒரே ஒருநபர் இருந்தாலும் அதிகமான நபர் இருக்கும் பொழுது எப்படி பிரசங்கிப்போமோ அதேபோலவே பிரசங்கிப்போம். ஆனாலும், அதிகமான மக்களை பார்க்கும் பொழுது அது உங்களுக்கு ஒரு நன்மையான உணர்வை கொடுக்கிறது. இங்கே ஒருவர் தவறவிட்டால் அங்கே இருக்கிற வேறோருவார் அதை பிடித்துக் கொள்வார், நீங்கள் பாருங்கள்! அதுதான் அங்கே வித்தியாசத்தை உண்டுபண்ணி அதை மகிமையுள்ளதாக ஆக்குகிறது.

9. இப்பொழுது அந்த நேர்காணலில் நாம் வேகமாகப் பார்க்க முடிந்தால் நலமாயிருக்கும்.

10. நான் வெளியே வந்தபோது சகோதரன் பௌட்ளியரை சந்தித்தேன். ஆனால், இங்கே வந்ததி லிருந்து நான் அவரை காணவேயில்லை. நான் அவரி டத்தில் ‘‘நீங்கள் எங்கேயிருந்தீர்கள்?’’ என்று கேட்டேன். அதற்கு அவர் ‘‘நான் அவர்களுக்கு வான்கோழி உணவை இரவுக்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந் தேன்’’ என்றார்.

மேலும், நான் அவரிடம் ‘‘நான் கொஞ்சம் எடை குறைந்து விட்டேன்’’ என்று கூறிக்கொண்டிருந்தேன்.

அவர் ‘‘நீங்களா’’ என்று கேட்டார்.

நான் ‘‘நீங்கள் கொஞ்சம்கூட மாறவே இல்லை’’ என்றேன்.

அவர் ‘‘நீங்களும் தான்’’ என்றார்.

11. நான் ‘‘அது உண்மையில் இராஜதந்திரம்’’ என்றேன். மேலும், நான் ‘‘ஆனால், உங்களுக்குத் தெரியும் நான் நூற்றெழுபது பவுண்டில் இருந்து நூற்று நாற்பத்தைந்து பவுண்டாக குறைந்து விட்டேன், எனவே, நான் நிச்சயமாகவே மாறிவிட்டேன்’’ என்று கூறினேன். ‘‘என்னுடைய உடைகளும் கூட, எனக்குச் சற்று பெரிதாக இருக்கின்றன’’ என்று சொன்னேன். அன்றொரு நாள் யாரோ ஒருவர் எனக்கு ஒரு சூட்டை வாங்கித் தந்தார். எனவே, நான் அதை இங்கே அணிந்து கொள்ள முடியும், அது தோள்பட்டைகளில் தொங்கிக் கொள்ளா மலும், இடுப்பு பகுதி மடிந்து போகாமலும் இருந்தது.

12. ஆனால், இயேசு கிறிஸ்துவுக்கு சிறந்த ஒன்றைச் செய்ய எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால், நீங்கள்

எல்லோரும் இங்கே வருகை புரிந்திருக்கும் இந்த வேளையில் என்னால் முடிந்த அளவுக்கு அதை சிறப்பாக செய்ய முயற்சிக்கிறேன்.

13. நான் இப்பொழுதுதான் அந்த அறையில் கூறிக் கொண்டிருந்தேன், மகத்தான பரிசுத்த ஆவியானவர் ஒரு பெண்ணின் சரீரத்திலிருந்து புற்றுநோயை அகற்றுவதை நான் கண்டேன். சரியாக அங்கே, அவள் டெக்சாஸில் இருந்து வந்துள்ள ஒரு பெண்மணி. அங்கே ஒரு பெண் உட்கார்ந்து கொண்டிருந்தாள், ஒரு ஊழியக்காரனுடைய மனைவி, சில நிமிடங்களுக்கு முன்பாக தான். அப்படிப் பட்ட நரம்பு தளர்ச்சியுற்ற ஒரு நபரை நான் கண்டதேயில்லை, மேலும், அவள் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறதை கர்த்தர் எனக்கு ஒரு தரிசனத்தில் காண்பித்தார். மேலும், நான் அவளைக் கண்டேன். நியூயார்க்கில் இருக்கும் பொழுது அவள் அழைத்தாள், மேலும், அவள் இங்கே நழுவி வர வேண்டும் என்று விரும்பினாள், அவள் ஐந்து நிமிடங்கள் மாத்திரமே இருந்தாள், அதன் பிறகு அவளுடைய கணவர் குடல் புண் வியாதியினால் அவதியுறுவதைக் கண்டேன். அவருக்கு அந்த குடல் புண் வருவதற்கு அவருக்கு அவருடைய மனைவியின் மேல் இருந்த பிரியம் தான் காரணமாய் இருந்தது. சர்வவல்லமையுள்ள தேவன் அங்கே உட்கார்ந்திருந்த அந்த பெண்ணை அமைதிப் படுத்தினார். அவள் அங்கே உட்கார்ந்து கொண்டு என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். மேலும் இதையும் கூட நான் சொல்ல விரும்புகிறேன். “சகோதரனே உங்களுடைய குடல்புண் முடிந்து விட்டது” பார்த்தீர்களா? ஆம், நீங்கள் இப்பொழுது சுகமடைந்து மீண்டும் கர்த்தருடைய ஊழியத்திற்கு திரும்பப் போகிறீர்கள்.

14. இப்பொழுது, கர்த்தர் செய்கிற ஒரு காரியத்தை நீங்கள் காணும் பொழுது, உங்களால் அதை நிரப்ப முடியாது. நீங்கள் தொடர்ந்து சென்று கொண்டே இருக்க வேண்டும், தொடர்ந்து சென்று கொண்டே இருக்க வேண்டும், தொடர்ந்து சென்று கொண்டே இருக்க வேண்டும், தொடர்ந்து செல்ல வேண்டும்.

15. மேலும், இப்பொழுது, நேற்றிரவு நமக்கு ஒரு மகத்தான ஆராதனை உண்டாகி இருந்தது, அது நல்லது. அது அருமையானது. வியாதியஸ்தர்கள் மேல் கரங்களை வைத்தல், அது ஒரு நல்ல காரியம் தான். சில சமயங்களில் அதுதான் தேவைப்படுகிறது. அதன் பிறகு அங்கே ஏதோ ஒன்று, அதாவது, அங்கே பின்னால் ஒரு காரியம் இருக்கிறது. அது என்னவென்றால், அவர்களால் அதைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை, ஆகவே, நீங்கள் அந்த நபரை கொண்டு வந்து, அது என்ன வென்று கண்டுபிடிக்க வேண்டும். பாருங்கள், அங்கே அவர்களை தொல்லைப்படுத்துகிற ஏதோ ஒன்று அங்கே இருக்கிறது, ஏதோ ஒன்று வழியில் உள்ளது. மேலும், ஒரு சிறிய நிழல் அதை அதிர்வடையச் செய்து விலக்கி விடும்.

16. இப்பொழுது, சில நிமிடங்களுக்கு முன்பாக, அங்கே இருக்கிற அந்த சிறிய பெண்மணி அவள் மிகவும் பதற்றம் அடைந்து காணப்பட்டாள், மிகவும் நொறுங்கிப் போய் இருந்தாள். பரிதாபமான அந்த சிறிய பெண்மணி, அவளால் தன்னுடைய மூச்சைக் கூட விட முடியவில்லை. அவள் அப்படியே உர்... உர்... என்று இரைப்பு வாங்கிக்கொண்டு, அப்படியே தொடர்ந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். பாருங்கள்.

17. இப்பொழுது, நீங்கள் செய்ய வேண்டிய காரியம். இங்கே ஒரு சிறிய உள்ளான காரியம், பாருங்கள், அது

அவளுடைய ஆவியை பற்றி கொள்கிறது. பார்த்தீர்களா? மேலும், அதன் பிறகு உங்களுடைய சொந்த சிந்தனை யையே அவளுக்கு வெளிப்படுத்திக் காட்டுகிறீர்கள். பார்த்தீர்களா? மேலும், நீங்கள் உங்களுடைய சிந்தனையை மாற்றிக் கொள்கிறீர்கள். பாருங்கள்? அதன் பிறகு அது அதைச் செய்யும் பொழுது, உங்களால் அவளை கிறிஸ்துவுக்குள் நடுநிலைப்படுத்த முடியும், அங்கிருந்து அவளால் தொடர்ந்து செல்ல முடியும். ஆனால், அவளுடைய சிந்திக்கும் விதத்தை நீங்கள் மாற்ற வேண்டும், பாருங்கள். அவளாகவே மாற்றிக் கொள்ள முடியாது. அவள் ஒரு வட்டத்துக்குள்ளாக சுழன்று கொண்டிருக்கிறாள், எனவே, நீங்கள் தான் அதை பற்றிப்பிடிக்க வேண்டும். இப்பொழுது, உங்களுக்கு ஏதோ ஒன்றை கொடுக்கக் கூடிய ஒரு சிறு காரியம் இருக்கிறது... அதை ஆராய முற்படாதீர்கள்; அப்படிச் செய்யாதீர்கள். அதை விசுவாசித்து அப்படியே தொடர்ந்து செல்லுங்கள்.

18. அன்றைக்கு மரித்துப்போன அந்த சிறிய குழந்தை, எப்படி அந்தத் தாயின் கரங்களுக்குள்ளாக அன்று காலை ஒன்பது மணியிலிருந்து அன்றிரவு வரைக்கும், அந்த சிறிய ஆவி எங்கே இருந்தது? நீங்கள் அந்த ஆவியை கண்டுபிடித்துத் திரும்ப கொண்டு வர வேண்டியதாய் இருக்கிறது. அதன்பின்னர், அது திரும்பி வருகிறதை நீங்கள் காணும் பொழுது, அப்பொழுது கர்த்தருடைய நாமத்தில் நீங்கள் எழும்பி நின்று அதைக் கூப்பிட முடியும். பாருங்கள், பிறகு அது அப்படியே சம்பவிக்கும். ஆனால், நீங்கள் அதைச் செய்யும் வரையில், நீங்கள் உங்களுடைய சுவாசத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறீர்கள், பாருங்கள்.

19. அது ஒன்றுமில்லை - அது அவ்வளவு ஒன்றும் இரகசியமான காரியமில்லை. அது தேவனை கண்டறி வதாகும், அது உங்களை வழியில் இருந்து அகற்றிவிட்டு பரிசுத்த ஆவியானவர் உங்களை உபயோகிக்க என்ன வெல்லாம் செய்ய விரும்புகிறாரோ அதைச் செய்ய அனுமதிக்கிறார். அவ்வளவுதான். எந்த வரமானாலும் முக்கியமான காரியம் என்னவென்றால், உங்களுடைய சொந்த கருத்துக்களை அகற்றிவிட்டு, கிறிஸ்துவை அங்கே அனுமதிப்பதாகும். அதன்பின்னர் அது என்ன வெல்லாம் கூறுகிறதோ, உங்களுக்கு அது கிறிஸ்துதானா இல்லையா என்று அறிந்து கொள்வதற்கு... ஒரு சிறிய உணர்ச்சிவசமா? அதை அப்படியே விட்டு விடுங்கள். ஆனால், அது வெறும் உணர்ச்சிவசப்படுதலாயிருந்தால், அதை அப்படியே விட்டு விடுங்கள். ஆனால், அது தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்டிருக்கும் என்றால், அப்பொழுது அது தேவனாயிருக்கிறது. எப்பொழுதுமே ஒவ்வொன்றையும் நிதானித்துப் பாருங்கள். அதாவது எந்த ஒரு ஆவி உங்களிடத்தில் எதைச் சொன்னாலும் அதை வார்த்தையைக் கொண்டு சோதித்து அறியுங்கள். அந்த வார்த்தை, அந்த வார்த்தையிலிருந்து ஒருபோதும் விலகிச் செல்லாதீர்கள்; நீங்கள் அவ்வாறு செய்வீர்கள் என்றால் இழக்கப் படுவீர்கள்.

20. இப்பொழுது, பிற்பகல் வரைக்கும் நாம் அப்படியே பேசிக் கொண்டிருப்பதற்கு முன்பாக, நாம் நம்முடைய வேதாகமத்தை திறந்து அங்கே சில வேத வாக்கியங்களை வாசிப்போம். மேலும், அதன்பின்னர் நாம்... நான் தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறேன். நாம் யாவரும் நேசிக்கிறோம் என்று எனக்குத் தெரியும். இப்பொழுது...

21. நான் இன்றுக் காலை உலகத்தோற்ற முதற் கொண்டே மறைக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவுக்குள் வெளிப்பட்டிருக்கிற தேவனுடைய இரகசியங்களின் பேரில் பிரசங்கிக்கவோ அல்லது பேசவோ அல்லது ஞாயிறு பள்ளிக்காக கற்பிக்கவோ இருந்தேன், அவை எல்லாவற்றையும் நிறைவேற்ற எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அந்த திருமணம் வந்து கொண்டிருப் பது குறித்து நான் மறந்து விட்டேன். எனவே, நான் ஒருவேளை அடுத்த முறை வரும் பொழுது அதற்குள் செல்வேன்.

22. இப்பொழுது, வேதத்தில் ஒரு மூன்று இடங்களி லிருந்து சில காரியங்களை நான் வாசிக்கப் போகிறேன். முதலாவது நான் பிலிப்பியர் 1 ஆம் அதிகாரத்திலிருந்து வாசிக்கப் போகிறேன். பிலிப்பியர் 1 ஆம் அதிகாரத்தில் 19 ஆம் வசனத்தில் இருந்து துவங்கி 22 ஆம் வசனம் முடிய வாசிக்க விரும்புகிறேன்.

**அது உங்கள் வேண்டுதலினாலும், இயேசுகிறிஸ்து வினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்.**

**நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்.**

**கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.**

**ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்து கொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன்.**

23. இப்பொழுது, ரோமருக்கு எழுதின நிருபத்தில். மேலும் நாம் ரோமர் 8 ஆம் அதிகாரத்திலிருந்து துவங்கப் போகிறோம், மேலும், 35 வது வசனம், நான் எதைப் பாடப்பொருளாக எடுத்துக் கொள்ள விரும்பு கிறேன் என்பதன் பேரில் துவங்க,

**கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?**

**உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும்,**

**இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக் கிறோமே.**

**மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதர் களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமை களானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங் களானாலும்,**

**உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டி யானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயத்திருக்கிறேன்.**

24. அப்போஸ்தலர் நடபடிகளில் 2 ஆம் அதிகாரம் 30 வது வசனம்.

**அவன் தீர்க்கதரிசியாயிருந்து: உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம் பண்ணினதை அறிந்தபடியால்;**

25. இப்பொழுது இது அதிகமான வேதவாக்கியங்கள், வேதாகமத்தில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சென்று அலசிப் பார்ப்பது. ஆனால், நமக்குத் தெரியும் அதாவது அதிகமான வேதவாக்கியங்கள் வாசிக்கப்படு மென்றால், நமக்கு உதவி செய்யக்கூடிய ஏதோ ஒன்றை நாம் அங்கே கண்டறியப் போகிறோம். தேவன் தாமே இப்பொழுது இந்த காலை வேளையிலே வார்த்தையின் முற்றிலுமானதாக: **'ஒரு முற்றிலுமானது'** என்கிற இந்த பொருளை நான் எடுத்துக் கொள்ள விரும்புகிறபடியால், இப்பொழுது தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக.

26. இப்பொழுது நாம், நான் இந்தப் பாடப் பொருளை பார்த்துக் கொண்டிருந்த பொழுது, நான் அகராதிக்குச் சென்றேன். நான் நினைத்தேன், அது என்ன சிலர் எப்போது பார்த்தாலும் அது முற்றிலுமானது, அது உண்மை, என்று கூறிக்கொண்டேயிருக்கிறார்களே அது என்ன என்று நான் நினைத்தேன். "முற்றிலுமானது" அந்த வார்த்தை, அதன் அர்த்தம் என்ன? அதன் பிறகு நான் அதனுடைய பொருள் என்ன என்று கண்டறிய நான் அகராதிக்குச் சென்றேன்.

27. வெப்ஸ்டர் அகராதி சொல்லுகிறது,"அது தன்னில் தானே பரிபூரணமானது, தன்னுடைய வல்லமையில் அளவற்றது, அடிப்படையில் ஒரு இறுதியானது." பாருங்கள், "தன்னுடைய வல்லமையில் அளவற்றது, தன்னில்தானே பரிபூரணமானது, மேலும், 'முற்றிலு மானது' என்கிற வார்த்தை அது உண்மையில் ஒரு முடிவானதாக," இருக்கிறது.

28. மேலும், நான் இதைக் கூற விரும்புகிறேன், மேலும், இந்த வார்த்தைகளை நீங்கள் சரியாக புரிந்து கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால்,

நான் ஜனங்களை வசீகரமாக பேசி இழுத்துப் பிடித்து வைக்கத்தக்கதாக மனோதத்துவரீதியாக பேசக்கூடிய பயிற்சி பெற்ற மதகுரு அல்ல. நான் செய்கிற ஒரே காரியம் என்னவென்றால், என்னால் முடிந்த அளவுக்கு சிறந்த ஒன்றைச் செய்ய முயற்சிப்பதே. கிறிஸ்து எனக்கு கொடுத்த நண்பர்களின் காரணத்தால், கிறிஸ்துவை குறித்த என்னுடைய எண்ணம் என்னவாயிருக்கிறது என்பதை அவர்கள் காணவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

29. இப்பொழுது, ஒவ்வொரு மகத்தான சாதனையும் ஒரு முற்றிலுமானதோடு பிணைக்கப்பட்டுள்ளது. ஒரு ‘முற்றிலுமானது’ இல்லாமல் நீங்கள் உங்கள் வாழ்க் கையை நடத்த முடியாது. ஒரு முற்றிலுமானது இல்லாமல் உங்களால் ஒரு சாதனையை நிகழ்த்த முடியாது. ஏனென்றால், அந்த ‘முற்றிலுமானது’ அது உங்களுடைய கடைசியான இணைப்புக் கம்பமாக இருக்கிறது. மேலும், அது உங்களுடைய பிரயாணத்தின் முடிவில் நீங்கள் தப்பி ஓடாமல் உங்களைத் தடுக்கிற ஒரு தடுப்புச் சட்டமாய் இருக்கிறது. அதுதான் நீங்கள் ஏதோ ஒன்றோடு கூட பிணைக்கப்பட்டிருக்கிற ஒரு இடமாய் இருக்கிறது.

30. நாம் இப்பொழுது ஜீவித்துக் கொண்டிருக்கிறதான இந்த நாளில், எல்லாமே உடைந்து கொண்டும், மிகவும் எளிதில் உடையக்கூடியதாகவும், அடித்துக் கொண்டு செல்லுகிறதாயும் இருக்கிறதான இந்த வேளையில், இந்த செய்தியானது மிகவும் பொருத்தமான ஒரு காரியமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். விசேஷமாக கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஆழமான தண்ணீர்களுக் குள்ளாக சென்று கொண்டிருக்கிறதான இந்த வேளையில், கடந்த இரண்டாயிரம் வருடங்களில் இல்லாத அளவுக்கு

கிறிஸ்தவ சபையானது இப்பொழுது ஆழமான தண்ணீரின் ஊடாக சென்று கொண்டிருக்கிறது. ஏனென்றால், கிறிஸ்தவ மார்க்கத்திற்கு ஏதோ ஒன்று அளிக்கப்பட்டிருக்கிறதான ஒரு இடத்திற்கு நாம் வந்து கொண்டிருக்கிறோம். அதாவது, அவர்கள் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டிய ஒரு நேரம், மேலும், கிறிஸ்தவ சபையானது தாங்கள் ஏதோ ஒன்றோடு கட்டப் பட்டிருக்கிறோம் என்று அறிந்து கொள்ளுகிற ஒரு இடத்திற்கு அவர்கள் வரவேண்டும் என்று நான் நினைக்கிறேன். வெறுமனே ஒரு இலையானது காற்றில் அடித்துக் கொண்டு செல்வது போலவோ அல்லது தண்ணீரில் மிதந்து செல்வது போலவோ இருக்கக் கூடாது. "பலவிதமான போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள்" என்று வேதம் கூறியுள்ளது. காற்றானது ஒரு சிறு இலையின் மேல் வந்து ஊத அது இந்த பக்கமாக அடித்துச் செல்கிறது, அதற்குப் பிறகு வேறொரு காற்று வருகிறது வடக்கு காற்று, தெற்கு காற்று, கிழக்கு காற்று, மேற்கு காற்று ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கமாக அந்த இலையை அடித்துக் கொண்டு செல்லுகிறது. அப்படி என்றால் நீங்கள் எங்கும் சென்றடையமாட்டீர்கள், ஏனென்றால், நீங்கள் நிலையாய் நிற்கவில்லை. கிறிஸ்தவ ஜீவியம் என்பது ஒரு நிலையான ஜீவியமாய் இருக்க வேண்டும். அது ஒரு கோட்பாட்டை உடைய காரியமாக இருக்க வேண்டும். அதாவது, உங்கள் ஜீவனைக் காட்டிலும் மேலான ஏதோ ஒரு காரியத்தோடு நீங்கள் பிணைக்கப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.

31. மேலும், நீங்கள் பிணைக்கப்பட்டிருக்கிற ஒரு காரியம் உங்களுக்கு இருக்க வேண்டும். சிலர் தங்கள் வியாபாரத்தோடு பிணைக்கப்பட்டுள்ளனர். சிலர் தங்கள்

குடும்பங்களோடு பிணைக்கப்பட்டுள்ளனர். சிலர் ஒரு கொள்கையோடு பிணைக்கப்பட்டுள்ளனர். சிலர் ராணுவ பதவியோடு பிணைக்கப்பட்டுள்ளனர். நாம் பிணைக்கப் பட்டுள்ள பல்வேறு விதமான வித்தியாசமான காரியங்கள் நமக்கு இருக்கின்றன. ஆனால், ஒரு கிறிஸ்தவனாக எது சரி என்று நாம் அறிந்திருக்கிற ஒன்றோடு கூட நாம் பிணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நான் நினைக் கிறேன். பாருங்கள், ஏனென்றால், நீங்கள் உங்கள் குடும்பத்தோடு சேர்த்துக் பிணைக்கப்பட்டிருக்கலாம் ஆனாலும், உங்கள் மனைவி உங்களை விட்டுப் போய்விடுவாள். நீங்கள் ராணுவத்தோடு கூட பிணைக்கப் பட்டிருக்கலாம், அதனால் நீங்கள் ஒருவேளை கொல்லப் படலாம். இது போல நீங்கள் பல்வேறு வித்தியாசமான காரியங்களோடு கூட பிணைக்கப்பட்டிருக்கலாம். ஆனாலும், அதற்கு ஒரு முடிவு உண்டு. ஆனால், கடைசியாக ஒரு இணைப்புக் கம்பம் உங்களுக்கு இருக்க வேண்டும். அதாவது, ஒரு மனிதன் தன்னுடைய நித்திய சேருமிடத்தை அடையும் படியாக அவன் பிணைக்கப் படுவதற்கு ஏதோ ஒன்று அவனுக்கு இருக்க வேண்டும். ஏனென்றால், நீங்கள் ஒருவேளை உங்களுடைய வேலையை நம்பிக் கொண்டு இருப்பீர்கள் என்றால் உங்களுடைய வேலை முடிந்ததும், அது முடிந்து விட்டது. உங்களுடைய குடும்பத்தை நம்பியிருப்பீர்கள் என்றால் உங்கள் குடும்பம் எடுக்கப்படும்பொழுது அது முடிந்துவிடுகிறது.

32. ஆனால், கடைசியான ஒரே ஒரு இணைப்புக் கம்பம் தான் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். மேலும், நான் விசுவாசிக்கிறேன் பவுலுக்கு அவனுடைய ஜீவியத்தில் ஒரு இணைப்புக் கம்பம் இருந்தது. மேலும், நான் சற்று பக்கவாட்டில் சென்று... நாம் அதை இப்படி

யாக அழைக்கலாம், அதாவது, அந்த இணைப்புக் கம்பத்தைக் குறித்து சற்றுநேரம் பேச விரும்புகிறேன். அவன் சொன்னான், "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்றான். கிறிஸ்துதான் பவுலுடைய முற்றிலுமானதாய் இருந்தார். அதுதான் அவனுடைய இணைப்புக்கம்பமாய் இருந்தது. அதுதான் அவனுடைய... அதுதான் எல்லா வாக்குவாதத்திற்கும் முடிவாயிருந்தது. அது கிறிஸ்து, கிறிஸ்து தான் அவனுடைய இணைப்புக் கம்பமாய் இருந்தார்.

33. பவுல் எப்போதுமே அந்த இணைப்புக் கம்பத்தைக் உடையவனாய் இருக்கவில்லை. அவன் பரிசேய கூட்டத்தோடு கட்டப்பட்டவனாய் இருந்தான். மேலும், அவன் பயிற்சி பெறவும், படிக்கவும் வேண்டிய தாயிருந்தது, அப்பொழுதுதான் அவர்கள் அவனை ஏற்றுக்கொண்டு அவனுக்கு கொடுக்கும் பதவியோடு அவன் கட்டப்பட முடியும். ஆனால், ஒரு நாளில் அவன் தமஸ்குவுக்குப் போகிற வழியிலே போய்க் கொண்டிருந் தான், அங்கே அவன் இயேசுவை முகமுகமாக சந்தித்தான். அங்கிருந்து அவன் தன்னுடைய பரிசேய இணைப்புக் கம்பத்திலிருந்து தன்னை அவிழ்த்து கொண்டான். பிறகு அவன் தன்னை, சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, மீண்டும் உயிரோடு எழுந்தவர் என்று அறிந்திருந்த இயேசுவோடு மறுபடியும் சேர்த்துக் கட்டிக்கொண்டான். பவுல் அந்த நபரை சந்தித்திருந்த படியால் அவன் அதை அறிந்திருந்தான். அதுதான் அவனை அங்கேயே மாற்றி விட்டது. அதன்பின்னர் அவன் ஒருபோதும் அதே பழையநபராக இருக்க வில்லை. அவன் வெறுமனே ஏதோ ஒரு புத்தகத்தை சந்திக்கவில்லை. அவன் வெறுமனே ஏதோவொரு கொள்கையை சந்திக்கவில்லை. அவன் இயேசு கிறிஸ்து,

என்ற அந்த நபரையே சந்தித்தான். "கர்த்தாவே, நீர் யார்?" என்று கேட்டான்.

அவர் "நானே இயேசு" என்றார்.

34. நாம் சில நிமிடங்களுக்கு அந்த மனமாற்றத்தைக் குறித்து சிந்திப்போம். பவுல் ஒரு உத்தமமான மனிதனாய் இருந்தான் என்று நான் விசுவாசிக்கிறேன். இது ஒரு ஞாயிறு பள்ளியாக இருக்கிறபடியால் நான் இதை ஒரு ஞாயிறு பள்ளி பாடத்தை போல கற்பிக்க விரும்புகிறேன். பவுல் ஒரு ஆழ்ந்த உத்தமமான மனிதனாய் இருந்தான். மேலும், மற்றவர்களிடத்திலிருந்து அவனை வித்தியாசப் படுத்தக்கூடிய எதுவும் அங்கே இருக்கவில்லை.

35. அந்த தீர்க்கதரிசிகள் யாவரும் நம்மைப் போன்ற மனிதர்களாகவே இருந்தார்கள். வேதம் அவ்விதமாக சொல்லுகிறது, பரிசுத்த யாக்கோபு 5-ல் "எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனா யிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான்". அவனுக்கு அவனுடைய சொந்த ஏற்றத் தாழ்வுகளும், உள்ளும் புறத்தையும் உடைய காரியங்கள் இருந்தன.

36. மேலும், பவுல் நம்மைப் போலவே சாதாரண மனிதனாக தான் இருந்தான். அவனுக்கு பதட்டமும், சந்தேகங்களும் இருந்தன. ஆனாலும், அவன் ஒரு உத்தமமான மனிதனாய் இருந்தான். அவன் இந்த உலகத்தில் இருந்ததிலேயே மிகச்சிறந்த ஒரு மதத்திற்குள் ளாகச் சென்றுகொண்டிருந்தான். அந்த அமைப்புக்கு அவன் ஒரு போதகனாகிக் கொண்டிருந்தான். அவனுடைய நாட்களில் இருந்த மிகப்பெரிய மகத்தான கமாலியேல் என்கிற போதகனுக்குக் கீழாக கற்பிக்கப் பட்டிருந்தான். பவுலுடைய ஜீவியத்தில் ஏதோ ஒரு

காரியம் இருக்கிறது என்பதை அவனுடைய பெற்றோர் கண்டு கொண்டனர். ஆகையால் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து, சம்பாதித்து தேவனுடைய எல்லா நியாயப்பிரமாணங்களையும் அவன் கற்றுக் கொள்ளும் படியாக அவனை பள்ளிக்கு அனுப்பினர். அவனும் ஆழமான உத்தமத்தோடு கூட அந்த நியாயப்பிரமாண வார்த்தைகள் ஒவ்வொன்றையும் விசுவாசித்தான்.

37. மேலும், அங்கே இந்தவிதமான தாழ்ந்த ஜாதி ஜனங்கள் இருக்கிறார்கள் என்பதை அவன் கேள்விப் பட்டிருந்தான். அதாவது அங்கே தீர்க்கதரிசி என்று தன்னை அழைத்துக் கொண்ட ஒரு மனிதன் இருந்தார் என்றும் அவர் கலிலேயாவில் அற்புதங்கள் செய்து, வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கினார் என்றும் அவரைச் சேர்ந்த அவருடைய கூட்ட மக்கள் அவரை ஒரு தீர்க்கதரிசி என்று அழைத்தார்கள் என்றும், அவன் கேள்விப்பட்டிருந்தான். ஆனால், அவன் சார்ந்திருந்த அவனுடைய அமைப்போ அந்த மனிதனை, இந்த நசரேயனாகிய இயேசுவை ஒரு தீர்க்கதரிசியாக அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால், அவர் இந்த கூட்டத்தோடு கூட இந்த அமைப்போடு கூட சேர்ந்து கொள்ளவில்லை. ஆகவே, பவுலால் அங்கே செல்ல முடியாமல் இருந்தது. ஏனென்றால், அவனுடைய சொந்த குழுவான ஜனங்களே அதில் விசுவாசம் கொள்ள வில்லை. மேலும், அப்படிப்பட்ட ஒரு காரியத்துக்கு எதிராக அவர்கள் அவனை வெகுவாய் எச்சரித்திருந் தனர்.

38. மேலும், பவுல் உத்தமமானவனாயிருந்து, அவன் நினைத்தான் இந்த காரியம் அது தேவனால் உண்டானது அல்ல என்றால், மேலும், என்னுடைய சபை அது தேவனால் உண்டானதல்ல என்றுதான் சொல்லுகிறது.

அப்படி என்றால், ஒரே ஒரு காரியம்தான் செய்யப்பட வேண்டும், அது என்னவென்றால், அதை அப்புறப் படுத்துவது. அவன், அதை வழியிலிருந்து அகற்றுவேன் என்றான். ஏனென்றால், அது ஒரு... அது ஒரு இடறலாய் இருக்கும். அது அவன் சார்ந்திருந்த அமைப்பின் விசுவாசத்திற்கு எதிரான சதை வளர்ச்சி, ஒரு புற்று நோய்க் கட்டியாக இருக்கும். ஆகவே, அது புற்றுநோய்க் கட்டி என்று அவன் அழைத்த விதமாக அல்லது அவனுடைய சபை அழைத்த விதமாக அந்த புற்று நோய்க் கட்டி தனக்கு அருமையான பரிசேய குழுவிற்கு வந்துவிடாமல் தடுக்க அவன் புறப்பட்டுச் சென்று, அதை வெட்டி அகற்ற வேண்டும் என்று தன்மனதில் தீர்மானித்துக் கொண்டான்.

39. ஒருநாள் அப்படிப்பட்ட ஜனங்களை கைது செய்வதற்காக பிரதான ஆசாரியனிடமிருந்து பெற்றுக் கொண்ட நிரூபங்களை தன்னுடைய சட்டைப் பையில் வைத்துக்கொண்டு, ஏனென்றால், அந்தப் பொறுப்பு தான் பவுலுக்கு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவன் தமஸ்கு என்று அழைக்கப்பட்ட ஒரு பட்டணத்துக்கு போகிறதற்காக தன் வழியிலே போய்க் கொண்டிருந்தான். அவர்கள் எருசலேமைச் சுற்றிலுமிருந்த அந்த ஜனங்களை ஒடுக்கி வைத்திருந்தார்கள். எனவே, அவன் ஸ்தேவானை கல்லெறிந்திருந்தான். மேலும், பவுல்தான் ஸ்தேவானை கல்லெறிவதற்கு ஒப்புக்கொடுத்தான். மேலும், சாட்சிக்காரருடைய வஸ்திரங்களை தன் கையில் வைத்துக்கொண்டு அதற்கு சாட்சியாக இருந்தான். இப்பொழுது இவன் இங்கேயும் இறங்கிச் சென்று அதே காரியத்தை தான் செய்யப்போகிறான். அதாவது அந்த பெரிய இடறல்களை அப்புறப்படுத்துவதற்காக சென்று கொண்டிருந்தான்.

40. ஆனால், ஏறக்குறைய, அது ஏறக்குறைய, நண் பகல் வேளையாய், சுமார் பதினொன்று, பன்னிரண்டு மணியளவில் இருக்கலாம். அவன் அடித்துக் கீழே தள்ளப்பட்டான். மேலும், அவன் அப்படி கீழே விழுந்த போது, அவன் மேலே நோக்கிப் பார்த்தான், அங்கே ஒரு ஒளி அவனுக்கு முன்பாக நின்று கொண்டிருந்தது. மேலும், ஒரு சத்தம் அந்த ஒளியிலிருந்து பேசி, “சவுலே, சவுலே, என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?” என்ற ஒரு கேள்வி. இப்போது பவுல் அல்லது சவுலுக்குத் தெரியும், இல்லை சரியாகக் கூறினால், சவுல் தன்னுடைய ஜனங்கள் எகிப்திலிருந்து வெளிவந்தது முதற்கொண்டு அதே ஒளியைப் பின்பற்றிக் கொண்டிருந்தனர் என்று அறிந்திருந்தான். மேலும் ...

41. நீங்கள் எப்பொழுதாவது லாம்சாவின் வேதாகம மொழிபெயர்ப்பைப் பார்த்திருக்கிறீர்களா?அந்த பழைய... தேவனின் அந்த பழைய எபிரெய அடையாளம், ஒரு முக்கோண வடிவ ஒளியாக இருக்கிறது. ஏறக்குறைய அதுபோன்று. அதாவது ஒரே தேவத்துவத்தில் தேவனின் மூன்று தன்மைகள் உள்ளன. மேலும், இந்த முக்கோண வடிவத்திலான ஒளி, மூன்றும் ஒன்றாக, ஒரே தேவனாக இருக்கிறார். அது தான், எபிரேயருக்கு தேவனுடைய, ஒளியை குறித்த அடையாளமாய் இருக்கிறது.

42. மேலும், மோசே அவரை முட்செடியில் சந்தித்த போது, அப்பொழுது அவர் “நான் இருக்கிறேன்,” என்றார், அதன் பொருள் அதே விதமாக இருப்பது. மூன்று, நேற்றும் இன்றும் மற்றும் என்றென்றும். இன்னும் அதே தேவனாக. மேலும், மோசே அவரை எரிகிற முட்செடியில் சந்தித்தான். அவர் ஒரு ஒளியாய் இருந்தார். மேலும், அவர் இஸ்ரேல் புத்திரரை வனாந்தரத்தில் வழி நடத்தின போது, அவர்

உடன்படிக்கையின் தூதனாக இருந்தார். மோசே அதை விசுவாசத்தினால் கண்டு எகிப்தை விட்டு ஓடினான். எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். விசுவாசத்தினாலே மோசே, அந்த அபிஷேகம் கிறிஸ்துவாய் இருந்ததென்று கண்டான். மேலும் அந்த அபிஷேகம் எந்தவொரு குறிப்பிட்ட மனிதனின் மேலும் இல்லை. ஆனால், அது ஒரு அக்கினி ஸ்தம்பத்தின் ரூபத்தில் இருந்தது. பார்த்தீர்களா?

43. அதன்பின்னர் அதே அபிஷேகம் அவருடைய ஞானஸ்நானத்தின் போது கீழே இறங்கி வந்து, கிறிஸ்து வுக்குள் சென்று அவருக்குள் வாசம் செய்தது. யோவான் அது அவர்தான் என்று அறிந்திருந்தான். “அவர்களை எகிப்திலிருந்து வனாந்தரத்துக்குள்ளாக வழி நடத்தி, அதன் பிறகு வனாந்தரத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள்ளாக வழிநடத்தின அதே ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினாலும், அக்கினி யினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்” என்றார்.

44. இப்பொழுது பவுலுக்கு இதை காணுகின்ற சிலாக்கியம் இன்னும் கிடைக்கவில்லை. ஆனால், அது உண்மை என்று உங்களுக்கு நிரூபிப்பதற்கு, யூதர்கள் ஒரு விக்கிரகத்துக்கு முன்பாக அல்லது அதுபோன்ற ஏதோ ஒன்றுக்கு முன்பாக விழுந்து வணங்குவதிலிருந்து வெகுவாக தடை செய்யப்பட்டிருந்தனர். இப்பொழுது அவன் அந்த மகத்தான ஒளியை கண்டபோது, அவன் அது கர்த்தர் என்பதை அறிந்திருந்தான். கர்த்தர் என்றால் “உரிமை கொள்வது, கட்டுபாடு, எடுத்துக்கொள்வது” என்று பொருள். வைராக்கியமிக்க அந்த யூதன் அது ஆவி என்று அறிந்திருந்த பொழுது, “கர்த்தாவே” என்று

ஏதோ ஒன்றைப் பார்த்து அழைத்திருக்கமாட்டான். ஆனால், கவனியுங்கள் இந்த அக்கினிஸ்தம்பம் தான் தம்முடைய ஜனங்களை அன்றைக்கு வழிநடத்தினவர் என்பதை அவன் அறிந்திருந்தான். மேலும், அவன் திரும்பி வந்து “கர்த்தாவே, நீர் யார்? நீர் யார்?” என்று கேட்கிறான். நீர் யார் என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். நீர் மோசேயை “நான் இருக்கிறேன்” என்ற நாமத்தில் சந்தித்தீர். ஆனால், நான் ஒரு நிமிடம் அவர்களுடைய சிந்தனையுடன் அங்கேயே நிறுத்து கிறேன்.

45. இயேசு இந்த பூமியில் இருந்தபோது, அவர் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்ததை அவர்கள் கண்டனர். கவனியுங்கள், “நான் தேவனிடத்திலிருந்து வந்தேன்,” அந்த ஆவி, அந்த ஒளி, அந்த அக்கினி ஸ்தம்பம், மேலும் “நான் தேவனிடத்திற்கு திரும்புகிறேன்”. என்றார். மேலும், நம்முடைய பாவங்களுக்கு மரிக்கத்தக்கதாக அவர் மாம்சமானார். மேலும், அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதலுக்குப் பிறகு, அவர் மேலேறிச் சென்ற பிறகு; நாற்பதாவது நாளில் அவர் மேலே ஏறிச்சென்றார். மேலும், ஐம்பதாவது நாளில் அவர் அக்கினி ஸ்தம்பத்தின் வடிவத்தில் ஜனங்கள் மத்தியில் திரும்பி வந்து தம்மைத் தாமே பிரித்துக் கொண்டு அக்கினிமயமான நாவுகள் போல காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தார். அதற்குப் பிறகு அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே அந்நிய பாஷைகளில் பேசத் தொடங்கினர்.

46. பாருங்கள், தேவன் தம்மைத் தாமே பிரித்துக் கொள்கிறார். தேவன் முதலில் மகத்தான அக்கினி

ஸ்தம்பத்தில் இருந்தார். தேவன் ஒரு மனித சரீரத்தில் வெளிப்பட்டார்; இப்பொழுது தேவன் தம்முடைய ஜனங்கள் மத்தியில் தம்மைப் பிரித்துக்கொண்டிருக்கிறார். அந்த அக்கினி ஸ்தம்பம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு, அக்கினிமயமான பிரிந்திருக்கிற நாவுகள்போல அவர் களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. பிளவுபட்ட நாவுகள் போன்ற அக்கினி அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அமர்ந்தது. அப்பொழுது, அவர்கள் எல்லாரும் அதனால் நிரப்பப் பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரங் களின் படியே அந்நிய பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்.

47. இப்பொழுது, நீங்கள் பாருங்கள், நாம் ஒரு பிரிந்திருக்கிற ஜனங்கள் அல்ல. நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஏனென்றால், நாம் ஒவ்வொருவரும் தேவனின் ஒரு பாகத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம். மேலும், நாம் ஒன்றுகூடி வரவேண்டும், மேலும், அதன் பிறகு அக்கினி ஸ்தம்பம் முழுமையாக வெளிப்படுகிறது. அதன் முழுமையில் வெளிப்படுகிறது; அவருடைய சபையானது உன்னதங்களில் அமர வைக்கப்படும் பொழுது அதன்பிறகு தேவனுடைய வல்லமையின் முழுமையானது அவருடைய சபையில் இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் ஆவிக்குரிய வரங்களைப் பெற்று, ஆவிக்குரிய ஊழியங்களையும் பெற்று ஒன்றுகூடி வந்து, மறுபடியும் அந்த அக்கினி ஸ்தம்பத்தை மீண்டும் கொண்டு வருகிறோம்.

48. மேலும், பவுல் அது கர்த்தரால் உண்டானது என்று அடையாளம் கண்டுகொண்டான். அதனால் அவன் அதைப் பார்த்து “கர்த்தாவே, நீர் யார்?

ஒருவேளை நான் உம்மை துன்பப்படுத்திக் கொண்டிருக் கிறேனோ?'' என்று கேட்டான்.

49. அவர் "நானே இயேசு, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாயிருக்கிறது'' என்றார்.

50. மேலும் பவுல் எழுந்து நேர்த்தெருவு என்னப் பட்ட இடத்துக்கு செல்லும் படியாக கட்டளையிடப் பட்டான். மேலும், அனனியா என்னும் பெயர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி, பவுல் தன்னிடத்தில் வருகிறதாக தரிசனம் கண்டு, அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அதற்குப் பிறகு அவன் அரபு தேசத்திற்கு சென்று மூன்று வருடங்கள் வேதவாக்கியங்களை ஆராய்ச்சி செய்தான், மேலும், தனக்கு காணப்பட்ட அந்த அக்கினி ஸ்தம்பம் அது என்னவாய் இருக்கிறது என்றும் ஆராய்ச்சி செய்தான்.

51. இப்பொழுது, பவுல் தன்னுடைய மீதியான வாழ்நாள் முழுவதற்கும் அதையே ஒரு இணைப்புக் கம்பமாக கொண்டிருந்தான் என்று நாம் பார்க்கிறோம். அவன் தேவனை முகமுகமாக சந்தித்திருந்தான். மேலும், தேவனால் அவன் கட்டளையிடப்பட்டிருந்தான். என்ன ஒரு இணைப்புக் கம்பம்! என்ன ஒரு முற்றிலுமானது! அதுதான் எல்லா வாதங்களுக்கும் முடிவானதாய் இருந்தது. அதுதான் பவுலுக்கு எல்லாமுமாக இருந்தது. எல்லா வாக்குவாதங்களும், எல்லாமே போய்விட்டது. பரிசேயர் என்ன சொன்னாலும், அல்லது சதுசேயர் என்ன சொன்னாலும், அல்லது வேறு யார் என்ன சொன்னாலும் எனக்குக் கவலையில்லை; வார்த்தை யினால் ரூபகாரப்படுத்தப்பட்ட தேவனை அவன் சந்தித்திருந்தான். அது காரியங்களை முடித்து வைத்தது. அதுதான் அவனுடைய மீதியான வாழ்நாளாக இருந்தது. ஏனென்றால், தேவன் ரூபகாரப்படுத்தப்பட்டதை அவன்

கண்டிருந்தான். மேலும், அது தேவன் தான் என்று அவனுக்கு வார்த்தையை கொண்டும் மற்றும் அவர் இருந்த வடிவம் மற்றும் ரூபத்தைக் கொண்டும் அது என்னவாயிருந்தது என்பதைக் குறித்து ஒரு காதால் கேட்கக்கூடிய சத்தத்தின் மூலமாக அவனிடத்தில் பேசி அவனுக்கு அது நிரூபிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது, அது ஒரு மகத்தான காரியமாய் இருந்தது. ஆகையால், அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக நின்று கொண்டு "அந்த பரமதரிசனத்திற்கு நான் கீழ்ப்படியாதவனாய் இருக்க வில்லை" என்று அவன் முழங்கினதில் ஆச்சரியப்படு வதற்கு ஒன்றுமில்லை. அவன் அதனோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தான். அங்கே அவன் அறிந்திருந்த ஒரு காரியம், எவராலும் அவனை விட்டு எடுத்துப் போட முடியாத ஒரு காரியம் அவனிடத்தில் இருந்தது.

52. இன்றைக்கு, இப்பொழுது, நாம் ஒருவேளை ஒரு கல்வியை மாத்திரம் சார்ந்து கொண்டிருப்போம் என்றால் அல்லது வேதாகமத்தை விளக்கிக் காண்பிக்க ஒரு இயந்திர முறையிலான ஒரு கல்வியறிவைக் கொண்டு அல்லது ஒரு முயற்சியை கொண்டு செய்வோம் என்றால், அப்பொழுது, நாம் அதை வெறும் மூளை அறிவில் மாத்திரமே பெற்றிருப்போம். ஆனால், அதை முகமுகமாக சந்தித்திராத வரைக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியாக பிரசங்க பீடத்தின் பின்னால் வருவதற்கு எந்த மனிதனுக்கும் உரிமை இல்லை.

53. வனாந்தரத்தின் பின்பக்கத்தில் இருந்த, மோசேயை போல, அவன் எவ்வளவு கல்வியறிவைப் பெற்றிருந்தாலும் அவனுக்கு என்ன சம்பவித்திருந் தாலும் அது ஒரு காரியமல்ல. அங்கே அவனுடைய குழப்பங்களும், தடுமாற்றங்களும் அவனை விட்டு நீங்கின. ஏனென்றால், அவன் ஒரு பரிசுத்தமான நிலத்தில்

தேவனோடு கூட நின்றான். அதை அவனிடத்திலிருந்து யாரும் எடுத்துப் போட முடியாது.

54. மேலும், தேவனோடு தன்னுடைய ஒரு அனுபவத்தை பெற்றிருக்கிற ஒவ்வொரு மனிதனும், ஸ்திரீயும் உங்கள் இருதயம் என்னும் பரிசுத்தமான இடத்தில் அதே அக்கினிஸ்தம்பத்தை சந்தித்திருக் கிறீர்கள். எந்த ஒரு வேதபண்டிதனும், எந்த பிசாசும், வேறு எந்த ஒன்றும் அதிலிருந்து அவர்களை பிரிக்க முடியாது,'' பவுல் “நிகழ்காரியங்களானாலும், வருங் காரியங்களானாலும், மரணமானாலும், வியாதியானாலும், வருத்தமானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயத்திருக்கிறேன்'' என்றான். அது ஒரு இணைப்புக் கம்பமாயிருக்கிறது. ஏதோ ஒன்று சம்பவத்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். என்னதான் விஞ்ஞானம் எழும்பி இது, அது அல்லது மற்ற காரியங்களை கூறினாலும், நீங்களோ கட்டப் பட்டிருக்கிறீர்கள். நீங்களும் தேவனும் ஒன்றாகி இருக்கிறீர்கள். அவர் உங்களுக்குள் இருக்கிறார், நீங்கள் அவருக்குள் இருக்கிறீர்கள், “நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்''. நீங்கள் அவருடன் கட்டப்பட்டிருக்கிறீர்கள்.

55. பவுல் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஒரு ஜீவியத்தைப் பெற்றிருந்தான். அவன் ஒருகாலத்தில் பெற்றிருந்த ஜீவியத்தைக் காட்டிலும் இது வித்தியாசமான ஒன்றாக இருந்தது. அவன் ஒரு சமயம் கல்வியறிவு சம்பந்தமான கருத்தை உடையவனாய் இருந்தான். ஆனால், இப்பொழுதோ கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஜீவியத்தை, ஒரு முற்றிலுமானதை

பெற்றிருக்கிறான். அகிரிப்பா எவ்வளவு சொன்னாலும் அது அவனுக்கு ஒரு காரியமில்லை. அவன், “பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்கு பைத்திய முண்டாக்குகிறது,”என்றான்.

அதற்கு அவன், “நான் பைத்தியக்காரனல்ல,” என்றான்.

56. அதன்பின்னர் அகிரிப்பா பவுலை நோக்கி, “நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய்,” என்று சொல்லுகிற அளவுக்கு பவுல் அகிரிப்பாவை மடக்கி விட்டான்.

57. இவன் சொன்னான், “நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறைய மாத்திரம் அல்ல, இந்த கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளு கிறேன்” என்றான்.

58. பவுல் பெற்றிருந்தது போன்ற, கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஒரு ஜீவியத்தை நீங்கள் பெற்றிருக்கும் பொழுது அது உங்களை அது போன்ற காரியங்களைச் செய்யும்படிச் செய்கிறது. சாதாரணமாக நீங்கள் அப்படிச் செய்ய மாட்டீர்கள். இப்பொழுது பாருங்கள், சாதாரணமாக, அந்த மனிதன் அவன் எல்லா விதமான பயிற்சிகளையும் பெற்றிருந்தான், எல்லா விதமான வேதவசனங்கள், காரியங்கள், ஆகவே, சாதாரணமாக, அவன் எந்தவிதமாக பயிற்சி பெற்றிருந் தானோ அந்த வழியில் தான் அவன் சென்றிருக்க வேண்டும். ஆனால், அவன் கிறிஸ்துவை தன்னுடைய முற்றிலுமானதாக ஆக்கிக் கொண்ட பொழுது, தன்னுடைய முடிவானதாக ஆக்கிக் கொண்ட பொழுது, அப்பொழுது, அங்கேதான் ஒரு வித்தியாசமான ஜீவியம்

உண்டாகிறது. அவன் வித்தியாசமாக செய்தான். அவன் அதற்கு முன்பு எவ்விதமாக பயிற்சி பெற்றிருந்தானோ அதிலிருந்து வித்தியாசமாக பைத்தியக்காரத்தனமான காரியங்களைச் செய்தான். மேலும், அது அதேக் காரியத்தைச் செய்யும்.

59. சபை ஒருவேளை அந்த சபைகளின் ஆலோசனை சங்கத்தை விட்டுவிலகி திரும்பி வந்து, தேவனுடைய வார்த்தையை தங்களுடைய முடிவானதாக ஆக்கிக்கொள்ளும்பொழுது, தேவனுடைய வார்த்தையை தங்கள் இணைக்கப்பட்ட கம்பமாக ஆக்கிக் கொள்ளும் பொழுது, அது அதே காரியத்தைச் செய்யும். ஆனால், அவர்கள் ஒரு மனிதனால் உண்டாக்கப்பட்ட சாதனை யோடு தங்களை பிணைத்துக் கொள்கிறார்கள். ஆகவே, அது விழுந்தாக வேண்டும். நல்லது, அவர்கள் அப்படிச் செய்வார்கள் என்று வேதம் கூறுகிறது. ஆனால், உலகத்தோற்ற முதல் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு மணவாட்டி இருக்கப்போகிறாள், அவள் அந்த இணைக்கப்பட்ட கம்பத்தில் கட்டப்படப் போகிறாள்.

60. ஏதேன் முதற்கொண்டு, நித்தியமானது உடைத்துக் கொண்டு காலத்துக்குள் இறங்கி வருகிறதை என்னால் காணமுடிகிறது. மேலும், அது நடந்தபோது, அங்கே ஒரு இரத்தக்கயிறானது வழிநெடுக கடந்து வந்து கல்வாரி வரைக்கும் செல்கிறது. மேலும், கல்வாரியிலிருந்து இந்தக் கயிறோடு கட்டப்பட்டு இயேசுவாகிய இணைப்புக் கம்பத்திற்கு அது கடந்து செல்கிறது. என்றோ ஒரு நாளில் தம்முடையவர்களை உரிமை கோரும்படியாக அவர் வருகிற பொழுது, அந்த முடிவானதோடு கூட தங்களைக் கட்டிக்கொண்ட ஒவ்வொருவரும் அந்த நித்தியத்துக்குள்ளாக எழுப்பப்படுவார்கள். ஏன்?அவர்கள் எல்லா காலத்திலும் நித்தியத்தில் இருந்தார்கள். அவர்கள்

நித்தியத்திலேயே முன்குறிக்கப்பட்டவர்கள். அவர்கள் தேவனுடைய பாகமாக இருக்கிறார்கள். அவர்கள் ஆதியிலேயே அவருடைய சிந்தையில் இருந்தார்கள். மேலும், அந்தப் பெரிய கயிறானது இழுக்கப்பட்ட பொழுது, நான் பேசிக் கொண்டிருந்ததான அந்த அடையாளமாகிய அந்த இரத்தக்கயிறு பூமியிலிருந்து இழுக்கப்படும் பொழுது, அந்த இரத்தத்தோடு இணைக்கப்பட்டிருந்த ஒவ்வொருவரும் சரியாக அப்படியே நித்தியத்திற்குள்ளாக மீண்டும் கொண்டு வரப்படுவார்கள். ஆனால், அது சம்பவிக்கக் கூடிய ஒரேவழி அந்த இயேசுகிறிஸ்து என்னும் முற்றிலுமானதோடு தங்களை கட்டிக் கொள்வதன் மூலமாக மாத்திரமே. அதுதான் முற்றிலுமானது. அது மனிதனுடைய ஒரு சாதனை அல்ல. ஆனால், தேவன் அவரை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார். மேலும், அவரே ஒரு முற்றிலுமானதாக இருக்கிறார். மேலும், அவர் உயிரோடு இருக்கிறார் என்று நாம் அறிந்திருக்கிறோம். ஏனென்றால், அவர் இங்கே தம்முடைய உயிர்த்தெழுதலின் வல்லமையில் நம்மோடு கூட இருந்து கொண்டு அவர் இந்த பூமியில் இருந்த பொழுது என்ன காரியங்களைச் செய்தாரோ அதே காரியங்களை இப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறார்.

61. நான் அந்த முடிவானதோடு கட்டப்பட்டிருக்கிறேன். அதுதான் எல்லா வாக்குவாதத்திற்கும் முடிவாய் இருக்கிறது. நான் அதனோடு கூட கட்டப்பட்டிருக்கிறேன். அதுதான் என்னுடைய ஜீவியம். கிறிஸ்து என்னை இரட்சித்தபோது நான் ஒரு பாவியாய் இருந்தேன். நான் ஏதோ ஒன்றை சந்தித்தேன். மேலும், அது எனக்குள் வந்தது முதற்கொண்டு அது வித்தியாசமாக இருந்து வருகிறது. நான் அதனோடு கூட கட்டப்பட்டிருக்கிறேன். நான் என்னவாகவெல்லாம்

இருக்கிறேனோ அதெல்லாம் அதனோடு கூட கட்டப் பட்டிருக்கிறது. அதன் பின்னர் தேவன் தம்முடைய ஜீவனை பிரித்து, நான் அவருக்குள்ளும், அவர் எனக்குள்ளும் ஜீவிக்க விட்டுவிடுகிறார், அப்பொழுது நாம் ஒன்றாக கட்டப்பட்டிருக்கிறோம். நான்...

62. மற்றவர்கள் என்ன விசுவாசிக்க விரும்பினாலும் அது எந்தவொரு வித்தியாசத்தையும் உண்டாக்குகிற தில்லை. ஒரு தனிநபராக நீ அதனோடு கூட கட்டப் பட்டிருக்கிறாய். அதுதான் உன்னுடைய முடிவானதாய் இருக்கிறது. அதுதான் கடைசியான வார்த்தையாக இருக் கிறது. பிறகு, அவர் வார்த்தையாக இருப்பாரென்றால், இதுதான் கடைசி வார்த்தையாக இருக்க வேண்டும். இதுவே அதைத் தீர்த்து வைக்க வேண்டும். அது என்னவெல்லாம் கூறுகிறதோ, அதுதான் அந்தச் சிவப்பு நூலாய் இருக்கிறது. அதுதான் கிறிஸ்துவாகும். அதற்கு முரணாயிருக்கிற எதைக்குறித்தும் எனக்கு ஒன்றுமே தெரியாது. நாம் அறிந்துகொள்ள வேண்டியதெல்லாம் இதுதான், இந்த வார்த்தை நமக்கு என்ன சொல்லுகிறது என்பது மாத்திரமே. ஏனென்றால், நான் கிறிஸ்துவோடு கட்டப்பட்டிருக்கிறேன். மேலும், கிறிஸ்து வார்த்தை யாயிருக்கிறார். இப்பொழுது நீங்கள் இதைப் புரிந்து கொண்டீர்களா?

63. இந்த நாளுக்கென்று ஒதுக்கப்பட்ட அவருடைய வார்த்தையின் பாகம், அந்த வார்த்தையின் பாகத்தை வெளிப்படுத்தி காட்டுவதற்கு பரிசுத்த ஆவியானவர் இங்கே இருக்கிறார்.

64. அப்படியே சரியாக அங்கே அவருடைய பிறப்பின்போது அது இருந்தது போலவே, ஏசாயா 9:6. எல்லா வேதவாக்கியங்கள் முழுவதிலும், அவரைக் குறித்து உரைக்கப்பட்ட ஒவ்வொன்றும் நிறைவேறியது.

லூக்காவின் புத்தகத்தில், நாம் அதைக் கூறுகிறோம்... நாம் அதைக் காண்கிறோம்.. அவரே முடிவாயிருந்தார், அவரே - அவரைக் குறித்த அந்தத் தீர்க்கதரிசனத்தின் முடிவாகவும் அவர் இருந்தார். அவர் அதை நிறை வேற்றினார். அந்த வரலாறு, அந்தப் பாடல்கள், பழைய ஏற்பாட்டில் அவரைக் குறித்துப் பேசப்பட்ட ஒவ்வொரு காரியத்தையும் அவர் நிறைவேற்றினார், அது அந்த முடிவானதாக ஆயிற்று. அதுவே அந்தக் காலத்திற்கான தேவனுடைய வார்த்தையின் இணைப்புக் கம்பமாக அமைந்தது.

65. மேலும், இந்த காலத்தின் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, மறுபடியும் பிறந்த அந்த ஜனங்கள்தான் இந்தக் கடைசி நாட்களில் நிறைவேற்றப்பட வேண்டிய அந்த வேதவாக்கியத்தின் இணைக்கப்பட்ட கம்பமாக இருக்கிறார்கள். அவர்கள்தான் அந்த முடிவாக இருக் கிறார்கள். அது தேவனுடைய முடிவானதாக இருக்கிறது. ஏனென்றால், அது அவருடைய வார்த்தையாக இருக் கிறது; மேலும், அந்த வார்த்தை கிறிஸ்துவாகிய அந்த இணைக்கப்பட்ட கம்பமாக இருக்கிறது. அதிலிருந்து விலகிச்செல்ல வழியே இல்லை. ஏதோ ஒன்று உங்களைப் பிடித்து வைத்திருக்கிறது.

66. நான் கூறினதுபோல, அது வழக்கமாக உங்களால் செய்யக்கூடாத காரியங்களை உங்களைச் செய்ய வைக்கிறது. அது பவுலை வழக்கமாக அவனால் செய்யக்கூடாத காரியத்தைச் செய்ய வைத்தது. அது மோசேயை சாதாரணமாக அவனால் செய்யக்கூடாத காரியத்தை அவனைச் செய்ய வைத்தது. அது ஒவ்வொரு மனிதனையும், ஸ்திரீயையும் அவர்கள் சாதாரணமாகச் செய்யக்கூடாத காரியங்களைச் செய்ய வைத்தது. அது நீங்கள் மையமாக கொண்டிருக்கிற ஏதோ

ஒரு காரியமாக இருக்கிறது. அது உங்களுடைய நிலை நிறுத்தியாக இருக்கிறது. அதுபோல...

67. அது கப்பலுக்கு நங்கூரமாயுள்ளது. புயலின் நேரத்தில் கப்பலானது அந்த நங்கூரத்தோடு சேர்த்துக் கட்டப்படுகிறது. ஆகவே, கிறிஸ்து உங்களுடைய முற்றிலுமானவராக இருப்பாரென்றால், நீங்கள் அவரோடு சேர்த்துக் கட்டப்படுகிறீர்கள். தொல்லையின் நேரங்களில் நீங்கள் கப்பலை அப்படியும், இப்படியுமாக ஆட விடுவீர்களென்றால், அது பாறைகளின் மேல் மோதி நொறுங்கும். ஆனால், அவர்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் நங்கூரத்தைப் பாய்ச்சுகிறார்கள். அப்பொழுது, அந்த நங்கூரமானது பாறையின் அடிப்பாகத்தைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் அது இழுத்துக்கொண்டு செல்லுகிறது. அதன்பிறகு, அந்தக் கப்பலானது அந்த நங்கூரத்தினால் பாறையோடு சேர்த்துக் கட்டப்படுகிறது. அதுதான் கப்பலுக்கு முற்றிலுமானதாக இருக்கிறது.

68. மறுபடியும் பிறந்த ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவோடு கட்டப்பட்டிருக்கிறான், வேதாகமம்தான் நங்கூரமாக இருக்கிறது. அதனோடு கூட தான் நாம் கட்டப்படுகிறோம். ஸ்தாபனங்களும், மற்ற வித்தியாசமான காரியங்களும், விஞ்ஞானமும், கல்வியாளர்களும் அவர்கள் என்ன வேண்டுமானாலும் கூறட்டும். வேத வார்த்தை என்ன கூறுகிறதோ, எதை வாக்குத்தத்தம் செய்கிறதோ அதனோடு கூட நாம் கட்டப்படுகிறோம். அதிலிருந்து எதுவும் நம்மை அசைக்க முடியாது. அதுதான் சரி. ஒரு உண்மையாக மறுபடியும் பிறந்த கிறிஸ்தவன், அவர்கள் வார்த்தையோடு நிலைத்திருக்கிறார்கள். அது அவர்களை ஒரு குறிப்பிட்ட காரியத்தை செய்யும்படி கூறினால், அதை குறிப்பிட்ட விதத்தில் செய்யும்படி கூறினால் அந்த விதத்தில்தான் நாம் அதைச்

செய்தாக வேண்டும். மற்றவர்கள் என்ன கூறினாலும் அது ஒரு பொருட்டல்ல, அதைத்தான் தேவன் கூறினார். நாம் அதனோடு கட்டப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஒரு ஜீவியம்.

கிறிஸ்து, மறுபடியும், அது அந்த வடக்கு நட்சத்திரம் போல இருக்கிறது.

69. இந்த உலகம் சுழலுகிறது என்று நீங்கள் அறிவீர்கள். மேலும், நட்சத்திரங்களும் கூட, உண்மையில் சாயங்கால நட்சத்திரம் என்று நீங்கள் காண்கிற ஒன்றுதான் விடிவெள்ளி நட்சத்திரமாகவும் இருக்கிறது. இந்த உலகம் தன்னைத்தானே சுற்றி வருகிறது. ஆனால், அது அந்த நட்சத்திரங்களிலிருந்து விலகிச் செல்கிறது. ஆனால், வடக்கு நட்சத்திரத்தை தவிர மற்ற எல்லாவற்றையும் விட்டுவிலகிச் செல்கிறது. இப்பொழுது, சாயங்கால நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு உங்கள் திசைகாட்டியை பொருத்திக்கொண்டு நீங்கள் எங்கும் செல்லமுடியாது. ஏனென்றால், அடுத்த நாள் காலை அது என்ன? நீங்கள் சாயங்கால நட்சத்திரத்தின் படி மேற்கில் இருந்தீர்கள். ஆனால், அடுத்த நாள் காலையில் நீங்கள் கிழக்கில் இருக்கிறீர்கள். பாருங்கள், நீங்கள் அப்படிச் செய்ய முடியாது. ஆனால், அதுவே வடக்கு நட்சத்திரத்தை நம்பி நீங்கள் அப்படிச் செய்ய முடியும். ஆமென். அதை உங்களுடைய மையப் பொருளாக வைத்துக் கொண்டால் அப்பொழுது நீங்கள் மீண்டு வர முடியும்.

70. மேலும், கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஒரு ஜீவியம் என்பதும் அதுவாகத் தான் இருக்கிறது. நீங்கள் இழக்கப்படும் பொழுது அவர் உங்களுடைய வடக்கு நட்சத்திரமாக இருக்கிறார். ஆகவே, அவர் வடக்கு நட்சத்திரமாக இருப்பாரென்றால் பரிசுத்த ஆவியானவர்

தான் உங்களுடைய திசைகாட்டியாக இருக்கிறார். மேலும், அந்த திசைகாட்டி வடக்கு நட்சத்திரத்தை மட்டுமே சுட்டிக்காட்டும். அது ஒரு கொள்கையையோ, ஒரு ஸ்தாபனத்தையோ சுட்டிக்காட்டாது. அது ஒரு உணர்ச்சி வசப்படுதலையோ அல்லது வேறெதுவாகவும் இருக் கட்டும் அதையெல்லாம் அது சுட்டிக்காட்டாது. அது வடக்கு நட்சத்திரத்தை மாத்திரமே உறுதியாக பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும். அவர் உங்கள் வடக்கு நட்சத்திரமாக இருக்கிறார். நீங்கள் தொலைந்து போகும் பொழுது, நீங்கள் ஸ்தாபனங்கள் மற்றும் அதுபோன்ற காரியங்களில் வழிவிலகிச் செல்லலாம். ஆனால், திசை காட்டியாக அந்த பரிசுத்த ஆவியானவர் அவர் உங்களை நேராக கிறிஸ்துவாகிய வார்த்தைக்குத் தான் உங்களைச் சுட்டிக்காட்டுவார். மேலும், உங்களை விடாமல் பிடித்துக் கொள்வார்? அதனோடு கட்டிக் கொள்ளுங்கள்.

71. அங்கே ஒரு வடக்கு நட்சத்திரம் இல்லாதிருந்தால் என்ன ஆவது? ஒரு பனி சூழ்ந்த கடலில் எப்படி ஒரு மனிதன் தன் வழியை கண்டுபிடிப்பான்? தேவனுடைய வார்த்தைக்கு நேராக உன்னை வழி நடத்தி, அதை வெளிப்படுத்தவும், அதை நிரூபிக்கவும் பரிசுத்த ஆவியானவர் அங்கே இல்லாதிருந்தால் என்ன ஆகி இருக்கும்? இந்தமணி வேளையில் நாம் என்ன செய் வோம்? பரிசுத்த ஆவியானவர் வார்த்தைக்கு மட்டுமே சுட்டிக்காட்டுகிறார். "மனுஷன் அப்பத்தினாலே மாத்திர மல்ல ஆனால், ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப் பான்." ஒரு பாகம் வார்த்தையினால் மாத்திரம் அல்ல; ஒவ்வொரு வார்த்தையினாலும், அந்த வார்த்தைகள் எல்லாவற்றைக் கொண்டும். "தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும்," அதைக்

கொண்டுதான் ஒரு மனிதன் பிழைக்கிறான். அவர்தான் உங்கள் ஜீவியத்தில் உங்களுடைய முற்றிலுமானவராய் இருக்கிறார். அவர் உன்னுடைய வடக்கு நட்சத்திர மாகவும் இருக்கிறார்.

72. விவாதத்திற்கு முடிவுண்டாக்குவதற்கு நம்மிடம் ஏதோவொன்று இருக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

73. உங்களுக்குத் தெரியும், ஒரு காலத்தில் மேஜை நாகரீகம் என்பது ஒரு பெண் சொன்ன காரியத்தின் மேல் சார்ந்திருந்தது. அவள் பெயர் எமிலி போஸ்ட் என்று நான் நினைக்கிறேன். ஒருவேளை நான் அதில் தவறாக இருக்கலாம். அது உண்மை என்று நான் நினைக்கிறேன். எமிலி போஸ்ட். எமிலி போஸ்ட் உங்களுடைய காராமணியை உங்கள் கத்தியை கொண்டு சாப்பிடுங்கள் என்று கூறியிருந்தாலும் எனக்கு எந்த கவலையும் இல்லை. அதுதான் நாகரீகமாக இருந்தது. ஏன்? அவள் தான் மேஜை நாகரீகத்தின் முற்றிலுமானதாக இருந்தாள். அதுசரி. ஒருவேளை நீங்கள் அந்த காராமணியை உங்கள் கையால் அள்ளி சாப்பிடுங்கள் என்று அவள் சொல்லியிருந்தால், நீங்கள் உங்கள் கையால் அதை அள்ளி சாப்பிடுவீர்கள். ஏன்? இந்த தேசம் அவளை மேஜை நாகரீகத்திற்கு முற்றிலுமானதாக ஆக்கி வைத்தது. ஆம், ஐயா.

74. ஜெர்மனி ஒரு முற்றிலுமான நிலையைக் கொண்டிருந்த ஒருநேரம் இருந்தது, அதுதான் ஹிட்லராக இருந்தது. அது ஒரு முற்றிலுமானதாயிருந்தது. வேறுயார் என்னக் கூறினாலும் எனக்குக் கவலை இல்லை. ஹிட்லர், “இதைச் செய்” என்று சொல்லிவிட்டால், நீங்கள் அதைச் செய்ய வேண்டும். நீ அதைச் செய்வதுதான் உனக்கு

நல்லது. அவன்தான் கடைசி வார்த்தையாக இருந்தான். ஹிட்லர் அவ்வாறு இருந்தான்.

75. ரோமாபுரி ஒரு முற்றிலுமான நிலையை உடைய தாயிருந்தது. அதுதான் முசோலினி என்கிற அந்த சர்வாதிகாரியாக இருந்தது. அவனுடைய ஓட்டுனர் ஒருவன் ஒரு நிமிடம் முன்னதாக வந்து சேர்ந்து விட்டான், அதற்காக அவன் அவனை அவனுடைய காரிலேயே சுட்டுக்கொன்று வெளியே இழுத்துத் தள்ளி விட்டு "ஒரு நிமிடம் முன்னதாக வா என்று நான் உனக்குச் சொல்லவில்லை, சரியான நேரத்தில் இங்கிருக்க வேண்டும் என்றுதான் நான் கூறினேன்" என்றான். ஒரு முற்றிலுமானது. அவன் என்னவெல்லாம் கூறினானோ அதையெல்லாம் அவர்கள் செய்ய வேண்டியவர்களாக இருந்தார்கள். அது அப்படியே செய்யப்பட வேண்டும். "என்னுடைய வார்த்தையினால் முழு உலகத்தையும் திருப்பிப் போடுவேன்," என்று அவன் கூறினான். அது தேவனுடைய வார்த்தையினால் தான் திரும்புகிற தாயிருக்கிறது!

76. எகிப்துக்கு ஒரு முற்றிலுமானது இருந்த ஒரு நேரம் இருந்தது. அதுதான் பார்வோனாக இருந்தது. நான் ஒரு சமயம் அந்த இடங்களைக் காண எகிப்துக்குச் சென்றிருந்தேன். மேலும், அந்த சக்கரவர்த்திகள் வீற்றிருந்த அந்த சிங்காசனங்களை நீங்கள் பார்க்க வேண்டுமென்றால் நீங்கள் பூமியில் இருபது அடி ஆழத்திற்கு தோண்ட வேண்டுமாம். அந்த ரோம சக்கரவர்த்தி. நான் ரோமாபுரிக்கும் சென்றிருக்கிறேன், எகிப்துக்கும் சென்றிருக்கிறேன்.

77. பாருங்கள், அவையெல்லாம் வரலாற்று துகள் களாக மாறிவிட்டன. ஏனென்றால், அது தவறான முற்றிலுமானதாய் இருந்தது. அதுதான் சரி. அது தவறாய்

இருந்தது. அது விழுந்துவிட்டது. அது மனிதனால் உண்டாக்கப்பட்ட முற்றிலுமானதாய் இருந்தது. மேலும், மனிதனால் உண்டாக்கப்பட்ட ஒவ்வொரு முற்றிலு மானதும், மனிதனால் சாதிக்கப்பட்ட ஒவ்வொரு சாதனை யும் மண்ணுக்குள் சென்றாக வேண்டும். அவை மண்ணுக்குள் சென்றாக வேண்டும். அது ஒரு தவறான விதமாய் இருக்கிறது எனவே, அது தோல்வி அடைகிறது.

78. நம்முடைய தேசத்தைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். நமக்கு ஏதாவது ஒரு பிரச்சனை என்றால், யாராவது நமக்கு ஏதாவது செய்துவிட்டால், அவர்கள் என்ன செய்கிறார்கள்? இங்கே இருக்கிற ஒரு சிறிய நீதிமன்றம் அல்லது காவல் நிலையத்தில் புகார் அளிக் கிறார்கள். அதன் பின்னர் அது அப்படியே தொடர்ந்து சென்று, முடிவாக அது உச்ச நீதிமன்றத்திற்கு வருகிறது. இப்பொழுது உச்சநீதிமன்றம் என்பது, அதுதான் இந்த தேசத்தின் முற்றிலுமானதாய் இருக்கிறது. அதுவே காரியங்களை தீர்த்து வைக்கிறது. இப்பொழுது, கனடாவில் இருக்கிற நம்முடைய நண்பர்கள் அவர்கள் கனடாவிலிருந்து ராணியிடம் செல்கிறார்கள். ஆனால், அமெரிக்க ஐக்கிய தேசத்தில் அது உச்சநீதிமன்றமாக இருக்கிறது. அதுதான் அதனுடைய முற்றிலுமானதாய் இருக்கிறது. சில சமயங்களில் நாம் அவர்களுடைய தீர்ப்புகளை விரும்புகிறதில்லை, ஆனால், எப்படி இருந் தாலும் அதற்குச் செவிகொடுக்க வேண்டியதாயுள்ளது. ஆம் ஐயா. நாம் அதனோடு ஒத்துப் போவதில்லை. சில சமயங்களில் அவர்கள் தீர்ப்புகளை நாம் விரும்புகிற தில்லை. ஆனால், என்ன செய்வது? அதுதான் இந்த தேசத்தின் முற்றிலுமானதாய் இருக்கிறது. இந்த தேசம் அதனோடு கட்டப்பட்டிருக்கிறது. அது எல்லா

விவாதத்துக்கும் முடிவாய் இருக்கிறது. அந்த உச்ச நீதிமன்றம் “நீங்கள் குற்றவாளி” என்று கூறினால், நீங்கள் குற்றவாளிதான். நமக்கு அது இருந்தாக வேண்டும், இல்லை என்றால் நமக்கு ஒரு தேசமே இருக்காது. நமக்கு அப்படி ஒரு காரியம் இல்லாதிருந்தால் என்ன செய்வது. நிச்சயமாக எல்லாவற்றுக்குமே ஒரு 'முற்றிலுமானது' என்பது இருக்கத்தான் செய்கிறது.

79. ஒரு பந்து விளையாட்டை எடுத்துக் கொண்டால், அங்கே ஒரு முற்றிலுமானது இருக்கிறது. அதுதான் அந்த நடுவர். சரி. இப்பொழுது அது ஒரு “சிக்ஸ்” என்று அவர் கூறினால், அதுவாகத் தான் அது இருக்கிறது. நீங்கள் என்ன கூறினாலும், அது ஒரு காரியம் இல்லை. நான் என்ன நினைக்கிறேன், நான் அதை எப்படிப் பார்க்கிறேன், நீங்கள் அதை எப்படிப் பார்க்கிறீர்கள்? அதெல்லாம் காரியம் இல்லை. அவர் என்ன சொல்லு கிறாரோ அதுதான் அங்கே காரியம். அது ஒரு முற்றிலுமானதாய் இருக்கிறது. அவர் அது “சிக்ஸ்” என்று கூறினால், நீங்கள் அதை ஒத்துக்கொண்டாக வேண்டும். ஏனென்றால், அவ்விதமாகத்தான் அது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படப் போகிறது. ஒருவேளை அந்த நடுவர் என்பவர் இல்லாமல் போனால் என்ன ஆவது! அப்பொழுது, யார் சரியாக இருப்பார்கள்? ஒருவர் சொல்கிறார் அது “சிக்ஸ்” என்று. இன்னொருவர் சொல்லுகிறார் அது “சிக்ஸ் அல்ல” என்று; அது ஒரு பந்தாக இருந்தது. அது ஒரு... ஏன், உங்களுக்கு அங்கே பெரிய குழப்பம் உண்டாயிருக்கும், உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று அறியாதிருப்பீர்கள்.

80. யாரோ ஒருவருடைய வார்த்தை இறுதியானதாய் இருக்க வேண்டியதாய் இருக்கிறது. ஆமென். நான் இப்பொழுது நன்றாக உணர்கிறேன். மகிமை!..

அல்லேலூயா! அங்கே இறுதியான ஒன்று இருந்தாக வேண்டும். அதைக் குறித்து மிகவும் சந்தோஷப் படுகிறேன். ஓ, இப்பொழுது, இங்கே அது “பாவம்” என்றோ அல்லது அது “பாவம் இல்லை” என்றோ சொல்லக்கூடிய ஒருவர் இருக்கிறார். நான் அதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அப்படிப்பட்ட ஒரு முற்றிலுமானதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். எந்த வாக்குவாதமும் இல்லை, வாக்குவாதம் பண்ண வேண்டிய அவசியமே இல்லை. அந்த நடுவர் “அது சிக்ஸ்” என்று சொல்லிவிட்டார். அதுவாகத் தான் அது இருக்கிறது. இதை உங்கள் மனதில் நன்றாக குறித்து வைத்துக் கொள்ளுங்கள். “அது ஒரு சிக்ஸ்” மேலும், அப்படியே தொடர்ந்து செல்லுங்கள். தேவன் ஒரு காரியத்தை கூறும்போது, அது அந்த விதமாகத்தான் இருக்கிறது. அதைக் குறித்து வாக்குவாதம் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. அதுவாகத்தான் அது இருக்கிறது. அவர் அப்படிச் சொல்லிவிட்டார். அதுதான் கிறிஸ்தவர்களுடைய முற்றிலுமானதாய் இருக்கிறது. அவன் ஒரு கிறிஸ்தவனாய் இருந்தால், அது அப்படித் தான் இருக்கிறது. தேவன் “இதை இந்த விதமாகச் செய்யுங்கள்” என்று கூறினார். அது அந்த விதமாகத் தான் செய்யப்பட வேண்டும். வாக்குவாதமே இல்லை. நல்லது அவர் சொல்லுகிறார் “இது அது” என்று. அதைக் குறித்து சொல்வதற்கு வேறு ஒன்றுமேயில்லை. தேவன் அவ்வண்ணமாய்க் கூறினார், அதுவே இதற்குத் தீர்வாகிறது!. ஒரு உண்மையான விசுவாசிக்கு அது முற்றிலுமானதாயுள்ளது. ஆம்.

81. ஒருவேளை அப்படிப்பட்ட ஒன்று இல்லாமல் இருந்திருந்தால் அதைப்பற்றி என்ன? நாம் எங்கே இருந்திருப்போம்? மெத்தோடிஸ்டுகள் சரியாய்

இருப்பார்களா அல்லது வேறுயார் சரியாக இருப்பார்கள்? பாருங்கள்! நமக்கு எப்படி இருந்திருக்கும்? அந்த காரணத்தினால் தான் உங்களுக்கு குழப்பம் உண்டாயிருக்கும். மேலும், அதுதான் காரணம். அது என்னவென்றால், அவர்கள் அந்த முற்றிலுமான நிலையிலிருந்து விலகிவிட்டனர், அந்த காரணத்தினால் தான் அவர்கள் மற்ற நட்சத்திரங்களின் பின்னால் மார்க்கம் தப்பி அலைந்து திரிந்து கொண்டிருக்கிறார்கள்.

82. ஆனால், அங்கே ஒரு முற்றிலுமானது இருக்கிறது. அங்கே ஒரு முற்றிலுமானது இருக்க வேண்டும். அங்கே ஒரு முற்றிலுமானது இருந்தாக வேண்டும். மேலும், அங்கே ஒரு முற்றிலுமானது இருக்கிறது. அதுதான் "வார்த்தை." மற்றபடி வேறுயார் என்ன கூறினாலும் அது ஒரு காரியம் இல்லை. ஆம், ஐயா.

83. இப்பொழுது, நம்முடைய பந்து விளையாட்டு களில் நமக்கு ஒரு நடுவர் இல்லாமலிருந்தால் ஒவ்வொருவரும் மற்றவருடைய தலை மயிரை பிடித்து இழுத்துக் கொண்டும், வாக்குவாதம் பண்ணிக்கொண்டும், சண்டை பண்ணிக்கொண்டும் இருப்பார்கள். பாருங்கள்! அந்த காரணத்தினால் தான் கிறிஸ்தவத்திலும் கூட ஒருவரை ஒருவர் முடியை பிடித்து இழுத்துக் கொண்டும், தர்க்கம் பண்ணிக் கொண்டும், சண்டை போட்டுக் கொண்டும் இருக்கிறார்கள், இதையெல்லாம் நிறுத்து வதற்காக தான் நமக்கு ஒரு முற்றிலுமானது அவசியமாய் இருக்கிறது. பாருங்கள்? வார்த்தை அதைச் சொல்லி இருக்கிறது. அது அதை தீர்த்து வைக்கிறது. அதிலிருந்து ஒன்றையும் சேர்க்கவும் செய்யாதீர்கள், நீக்கவும் செய்யாதீர்கள். அந்த வார்த்தை இருக்கிற விதமாகவே அதை அப்படியே விட்டுவிடுங்கள்.

84. போக்குவரத்தில் ஒரு முற்றிலுமானது இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். அதுதான் நிறுத்த விளக்கு, போக்குவரத்து சமிக்ஞை. அது ஒருவேளை வேலை செய்யவில்லை என்றால், என்ன ஆவது? ஓ என்னே! அப்படிப்பட்ட ஒரு காரியத்திற்குள் நீங்கள் எப்பொழு தாவது சிக்கியிருக்கிறீர்களா? நான் சிக்கியிருக்கிறேன். சந்தேகமே இல்லை, ஒவ்வொரு ஓட்டுனருக்கும் அந்த அனுபவம் இருக்கும். அந்த நிறுத்த விளக்கு வேலை செய்யவில்லையென்றால் என்னவாகும்? அப்பொழுது ஒவ்வொருவரும் சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். எல்லோரும் நேராக வண்டியை ஓட்டிக்கொண்டு செல் வார்கள். அப்பொழுது ஒருவன் "நான் தான் இங்கே முதலில் வந்தேன்" என்பான். இன்னொருவன், "நான் சொல்வதை நீ கேள், நான் வேலைக்குப் செல்ல வேண்டும்" என்பான். ஓ என்னே! அந்தப் பெண்கள் தங்கள் கைப்பைகளை சுழற்றிக்கொண்டும், புருஷர்கள் ஒருவரை ஒருவர் கையால் குத்திக் கொண்டும், அங்கே அந்த குழப்பத்தைக் குறித்துச் சொல்லவா வேண்டும்? அங்கே ஒரு முற்றிலுமான ஒன்று இருக்க வேண்டும். ஏதோ ஒன்று "அது சரி" என்று சொல்லுகிற காரியம். அதுதான் இது. அந்த விளக்கு " நிறுத்து" என்றால் அது நிறுத்தப்படுவதைக் குறிக்கிறது. அது "போ" என்று கூறும்போது, அதற்குப் "போ" என்று பொருள்படுகிறது. அப்படி இல்லையென்றால் நீங்கள் சிக்கலில் அகப்பட்டு கொள்வீர்கள்.

85. ஆகவே, அவ்விதமாகவே கிறிஸ்தவ ஜீவியத் திலும் இருக்கிறது. அங்கே ஒரு நிறுத்துமிடம் இருக்கிறது. மேலும், அங்கே ஒரு புறப்படும் இடம் ஒன்றும் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையே முற்றிலுமான

தாயுள்ளது. அதுதான் கிறிஸ்து. ஆம், ஐயா. நீங்கள் ஒருவேளை...

86. போக்குவரத்து சமிக்ஞை இயக்கப்படவில்லையென்றால், அப்பொழுது நமக்கு ஒரு போக்குவரத்து நெரிசல் ஏற்படும். ஆகவே, நம்முடைய ஆவிக்குரிய தலைமையகத்திலும் இன்றைக்கு அதைத்தான் பெற்றுள்ளோம் என்று நான் நினைக்கிறேன்; ஒரு வாகன நெரிசல், பாவனை விசுவாசிகளும், அவிசுவாசிகளும் எல்லாம் ஒருவரோடொருவர் நெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு போக்குவரத்து நெரிசல் நேரிட்டிருக்கிறது. ஏன்? அவர்களுக்கு ஒரு முற்றிலுமானது இல்லாத காரணத்தால். ஒருவர் "நல்லது நாங்கள்... நாங்கள் தான் முற்றிலுமானவர்கள்," என்று கூறுகிறார்கள். மற்றொருவர், "நாங்கள் தான் முற்றிலுமானவர்கள்" என்று கூறுகின்றனர்.

87. தேவன் தான் முற்றிலுமானவர். அவர் "என்னுடையதையன்றி மற்ற முற்றிலுமானதெல்லாம் ஒவ்வொன்றும், ஒரு பொய்யாய் இருக்கக் கடவது" என்று கூறினார். என்னுடையதே சத்தியம். எனவே கிறிஸ்தவ மார்க்கத்திற்கு முற்றிலுமான ஒன்று உண்டு. அதுதான் எல்லா வாதங்களுக்கும் முடிவாய் இருக்கிறது. வேதம் அவ்வண்ணமாய்க் கூறியுள்ளது. அது அதை சரிப்படுத்துகிறது. ஆம், ஐயா. ஒவ்வொரு காரியத்திலும் ஒரு முற்றிலுமானது இருக்க வேண்டும்.

88. சிலர் இன்றைய சபைகளைப் போலவே, பெரும்பாலான சபைகள் தங்களுடைய சொந்த முற்றிலுமான முறையைக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் தங்கள் சொந்த காரியங்களை உடையவர்களாயிருந்தனர், நியாயதிபதிகளின் நாட்களில் நடந்தது போன்றே, "அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன்தன் பார்வைக்கு சரிப்போனபடி செய்து

வந்தான்''. ஆனால், அது சரியாக இருக்கவில்லை. பாருங்கள்? எப்பொழுது அப்படி நடந்ததென்றால், தேவனுடைய வார்த்தையும், தீர்க்கதரிசியுடைய வார்த்தையும் இல்லாதபோது தான் அப்படி நடந்தது. வார்த்தை தான் அந்த முற்றிலுமானதாய் இருக்கிறது. அவர்களோ தங்களுடைய சொந்த முற்றிலுமானதை உடையவர்களாயிருந்தனர். ஒவ்வொருவரும் ''நாங்கள் தான் சத்தியமும் வழியுமாய் இருக்கிறோம்'' என்று கூறுகிறார்கள், ''நாங்கள்தான் சத்தியமும் வழியுமாய் இருக்கிறோம்'' என்று கூறுகிறார்கள்.

89. ஆனால், இயேசுவோ, ''அவரே சத்தியமும், வழியுமாய் இருக்கிறார்'', சத்தியமும், வழியும், வெளிச் சமும் என்றார். அது சரியா? நல்லது. அப்படியானால், அவர்தான் அந்த வார்த்தை. எனவே, அங்கே தான் அந்த முற்றிலுமானது இருக்கிறது. மேலும், ஸ்தாபன முற்றிலுமானது, அது ஒன்றுமே இல்லை. அது தவறாய் இருக்கிறது. அதை விட்டு விடுங்கள்.

90. இப்பொழுது, மனிதன் தன்னுடைய பார்வைக்குச் சரியானதை செய்கிறான். ஆனால், அவன் அதை செய்வதற்கென்று தேவனிடம் ஒருவழி இருக்கிறது. பாருங்கள், அங்கே தேவனும், அவருடைய வார்த்தையும், அவருடைய தீர்க்கதரிசிகளும் இல்லாத போது ஒவ்வொரு மனிதனும் அவன் செய்ய விரும்பினது போலவே செய்தான்.

91. மேலும், இந்த நாட்களில் அப்படித்தான் இருந்து வருகிறது. ஒவ்வொருவனும் ''நான் – நான் இதைச் சேர்ந்தவன்'' என்றான். நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? என்று கேட்டால், ''நான் ஒரு பிரஸ்பிட்டேரியன்'' என்றான். நான் உன்னைக் கேட்கிறேன், நீங்கள் ஒரு கிறிஸ்தவரா?

ஒரு பெண் சொன்னாள், நீங்கள் புரிந்து கொள்ளும் படியாக நான் இதைச் சொல்கிறேன், அவள் “நான் ஒவ்வொரு இரவும் மெழுகுவர்த்தியை ஏற்றுகிறேன்” என்றாள். மற்றொரு மனிதன், ஜெப வரிசையில் வந்த பொழுது அவன் ஒரு கிறிஸ்தவனா என்று நான் அவனிடம் கேட்ட பொழுது, அவன் “நான் ஒரு அமெரிக்கன்” என்றான். என்ன ஒரு தைரியம் பாருங்கள்! அப்படிப்பட்டதோடு இனி செய்வதற்கு ஒன்றுமே இல்லை. பாருங்கள்! அவர்கள் ஒரு தேசத்தோடு கட்டப்பட்டிருக்கின்றனர். வேறொருவன் ஒரு ஸ்தாபனத் தோடும், கொள்கைகளோடும் கட்டப்பட்டிருக்கின்றனர்.

92. ஆனால், ஒரு கிறிஸ்தவன் என்பது “கிறிஸ்துவை போலவே” என்று பொருள். மேலும், கிறிஸ்துவை போலவே நீங்கள் இருக்கக்கூடிய ஒரேவழி என்ன வென்றால், கிறிஸ்துவாகிய வார்த்தை உங்களுக்குள் இருக்க வேண்டும். அதுதான் இறுதியானது. ஆம். நான் இதை என்னுடைய மனந்திரும்புதலுக்கு முன்பாகவே பார்த்திருக்கிறேன். மேலும், சபை என்னைப் பற்றிப் பிடித்துக் கொள்வதற்கு முன்பாகவே தேவன் என்னைப் பற்றிப்பிடித்துக் கொண்டார் என்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கிறேன். ஆகவே, நான் இப்பொழுது அறிந்திருக்கிறேன், நான் எப்பொழுது ...

93. ஒரு அருமையான பாப்டிஸ்டு ஊழியக்காரர், சகோதரன் நெய்லர், அவர் என்னுடன் பேசினார். அவர் இன்று மகிமையில் இருக்கிறார். மேலும், ஓ, நான் தேவனை கண்டறிய முயற்சித்துக் கொண்டிருந்தபோது, அநேகர் என்னிடம் வந்து பேசி இருக்கிறார்கள். அந்த ஏழாம்நாள் ஆசரிப்பு பிரசங்கி, நான் அவர்களோடு சேர்ந்து கொள்ள வேண்டும் என்பதும் இன்னும் அது போன்றும் அவர் விரும்பினார். ஆனால், நான்

பார்த்தேன், நான் ஒரு கிறிஸ்தவனாவதாக இருந்தால், என்னால் அதைச் சொல்ல முடியாது. நீ ஒரு கிறிஸ்தவனா என்று யாராவது என்னிடத்தில் கேட்டால், "இப்பொழுது, நான் ஒரு ஏழாம் நாள் ஆசரிப்புக்காரன்," என்று என்னால்—என்னால் கூற முடியாது என்பதை நான் கண்டேன். "நான் ஒரு பாப்டிஸ்டு," அது பரவாயில்லை. பாருங்கள், ஆனால், எனக்கு அதைக் காட்டிலும் அதிக நிச்சயமான ஒன்றை நான் பெற்றிருக்க வேண்டியவனாய் இருந்தேன். என்னால் - என்னால் யாரையுமே நம்ப முடியவில்லை. ஏனென்றால், ஒவ்வொருவரும் தடுமாறிக் கொண்டுதான் இருந்தார்கள்.

94. எங்கோ யாரோ ஒருவர் இருக்கிறார் என்று நான் எண்ணினேன். உண்மையான அந்த ஒன்றை எங்கோ நீங்கள் பெற்றிருக்க வேண்டும்,

95. எனவே, எனக்கு ஒரு முற்றிலுமானது தேவை யாய் இருந்தது. எனவே தேவனுடைய வார்த்தையை நான் எடுத்துக் கொண்டேன். அவர் வார்த்தையாய் இருக்கிறார் என்று பரிசுத்த யோவான் 1-ல் நான் வாசித்தேன். மேலும், "இந்த முற்றிலுமானதின் மேல் நான் என் சபையை கட்டுவேன்". உம் - ஹூம். அது சரி. எனவே நான் அவரை அவருடைய வார்த்தையின்படி ஏற்றுக்கொண்டேன். வெளிப்படுத்தின விசேஷம் 22:19, "ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களி லிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுத்தகத் திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார்" என்று கூறியுள்ளது. அதுதான் முற்றிலுமானதாக இருக்கிறது. அதுதான் எல்லா விவாதத்துக்கும் முடிவாக இருக்கிறது. இதுதான் அந்த முற்றிலுமானதாக இருக்கிறது.

“எவனாகிலும் அதிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால் அல்லது எதையாகிலும் அதனோடு கூட்டினால்” என்று தேவன் கூறினார். மேலும் “ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய பங்கை நான் எடுத்துப் போடுவேன்”. அதுதான் அந்த முற்றிலுமானதாக இருக்க வேண்டியதாய் இருந்தது. மேலும், இயேசு “மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, ஒவ்வொரு வார்த்தை யினாலும் பிழைப்பான்” என்று கூறினார். அதன்பின்னர். “ஒவ்வொரு வார்த்தையினாலும்” என்றிருக்க வேண்டும் என்பதை நான் அறிந்து கொண்டேன். மேலும் வேதத்தில், “கற்பனையின் மேல் கற்பனையும், பிரமாணத்தின் மேல் பிரமாணமும்” என்று கூறப்பட் டுள்ளது, அந்தவிதமாகவே அது எழுதப்பட்டிருக்கிற படியே வர வேண்டியதாக இருக்கிறது,

96. அதன் பின்னர், “நீங்கள் என்னிலும்” அவர் வார்த்தையாய் இருக்கிறார், “என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள் வதுதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்” என்றார். அப்பொழுது, நான் அறிந்து கொண்டேன், கிறிஸ்தவம் என்பது அது தேவனுடைய வார்த்தையாக இருக்குமென்றால், மேலும், அவரே அந்த வார்த்தையாக இருந்தார். ஆகவே, அந்த வார்த்தையை ஏற்றுக் கொள்வதன் மூலம், அந்த வார்த்தை அவர் மூலமாக ஜீவித்தது, இப்பொழுது, நான் அறிகிறேன், “நீங்கள் என்னிலும், என்வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால், அப்பொழுது நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்.” மேலும், நீங்கள் வார்த்தையில் இருந்தால், வார்த்தையின் ஒரு பாகத்தில் இருந்தால், வார்த்தை உங்களை எதை கேட்கும்படி சொல்லுகிறதோ அதை மட்டுமே நீங்கள் கேட்பீர்கள்.

நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற நாளை அறிந்து, அதற்கேற்ற விதமாக கேளுங்கள்.

97. ஆகையால், நம்முடைய பொருளுக்குத் திரும்பி வருவோம். இப்பொழுது, இதை தனிப்பட்ட விதமாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால், நான் கட்டப் பட்டிருக்கிறேன். நான் இயேசு கிறிஸ்துவோடு, அவருக் காக அவருடைய வார்த்தையால், அவருடன் கட்டப் பட்டிருக்கிறேன். அவரே என்னுடைய முற்றிலுமானதாய் இருக்கிறார்.

98. இந்த எல்லா ஸ்தாபனங்களும் மற்ற காரியங் களும் தங்களுடைய முற்றிலுமானதைப் பெற்றிருக் கிறார்கள் என்பதை நான் கண்டேன். ஒவ்வொருவரும், தங்களுடைய சொந்த முற்றிலுமான முறையைக் கொண்டிருக்கிறார்கள்.

99. கத்தோலிக்கர்கள், அந்த போப் ஒன்றை கூறும் போது, அதுதான். அதுவே கத்தோலிக்க சபையின் முற்றிலுமானதாயுள்ளது. குருவானவர் என்ன கூறுகிறார், பேராயர் என்ன கூறுகிறார், போப் ஆண்டவருக்கு அடுத்தவர் என்ன கூறுகிறார் என்று எனக்குக் கவலை யில்லை; ஆனால், போப் ஒன்றைக் கூறிவிட்டால் அவ்வளவுதான். அதுதான் முற்றிலுமானதாகும். அதுவே சரியாக உள்ளது.

100. மெத்தோடிஸ்டு சபையிலும் மற்றும் அநேக பிராட்டஸ்டன்டு ஸ்தாபனங்களிலும் பேராயர் என்ன கூறுகிறாரோ, அதுதான் முற்றிலுமானதாய் இருக்கிறது. கோட்பாடு என்ன கூறினாலும், அவர் கூறுவது தான் முற்றிலுமானதாயுள்ளது.

101. பெந்தெகொஸ்தே சபைகளில், பொது மேற் பார்வையாளர் என்ன கூறுகிறாரோ அதுதான், ஒரு

வேளை அந்த நபரால் நீங்கள் ஒரு எழுப்புதலை பெறப்போகிறீர்களோ, இல்லையோ, அதுதான் முற்றிலுமானது. நீங்கள் அவருடைய வார்த்தையோடு இணங்கவில்லையென்றால், நீங்கள் அந்த ஸ்தாபனத்திலிருந்து உதைத்து தள்ளப்படுகிறீர்கள். பாருங்கள்? அங்கே வார்த்தை மதிக்கப்படுவதே இல்லை. பார்த்தீர்களா? நீங்கள் இதுபோன்ற முற்றிலுமானவைகளை பெற்றுக் கொள்கிறீர்கள், ஒவ்வொருவனும் தன்தன் சொந்த முற்றிலுமானதைப் பெற்றிருக்கிறான்.

102. ஆனால், உங்களுக்குத் தெரியுமா? இதை நான் அவமதிக்கும் விதமாகக் கூறவில்லை. நான் இது உண்மை என்பதால் கூறுகிறேன். அப் 20:24-ல் பவுல் "இந்த காரியங்கள் எதுவுமே என்னை அசைக்கவில்லை." என்று கூறினவிதமாக தான், நானும் உணருகிறேன். "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்". இந்த முற்றிலுமானவைகளைக் குறித்து எனக்குக் கவலை இல்லை. அது போப்பாக இருந்தாலும் சரி, பேராயர் அல்லது பொது மேலாளர் அல்லது ஒரு ஆலோசகர் அல்லது ஒரு அமைப்பு அல்லது அது என்னவாயிருந்தாலும் இருக்கட்டும், இந்த காரியங்கள் எதுவுமே என்னை அசைக்கவில்லை. அவர்கள், "நல்லது நாங்கள் உனக்கு ஒத்துழைப்பு... கொடுக்கப் போவதில்லை" என்று கூறினாலும், எனக்கு அதைக் குறித்து கவலை இல்லை. அது ஒரு சிறு வித்தியாசத்தையும் உண்டுபண்ணுகிறதில்லை. நான் இயேசு கிறிஸ்துவையன்றி வேறொன்றையும் அறியாதிருக்கத் தீர்மானித்து விட்டேன், அவருடைய வார்த்தை நம் மத்தியில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. நான் அதனோடு சேர்த்து கட்டப்பட்டிருக்

கிறேன். அதுதான் என்னுடைய நங்கூரமாய் இருக்கிறது. நான் அதில் நங்கூரமிட்டுள்ளேன்.

103. “நான் அது முதற்கொண்டு”… பவுல் “நான் வழியிலே அவரை சந்தித்த நாள் முதற்கொண்டு, நான் அப்படியே திரும்பி விட்டேன், நான்… அவர் என்னை நேராக்கினார்” என்றான்.

104. என்னே! எப்படியாய் அவர் என்னை நேராக்கினார்! எப்படிப்பட்ட ஒரு நேராக்குதலை அவர் என்மேல் செய்ய வேண்டியதாய் இருந்தது! ஆனால், அவர் என்னை நேராக்கினது முதற்கொண்டு நான் அதனோடு கட்டப்பட்டுவிட்டேன். வார்த்தை சத்திய மாயிருந்ததையும், அதற்கு முரண்பட்ட ஒவ்வொரு காரியமும் தவறாயிருந்ததையும் நான் கண்டேன்.

105. என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அவர் என்னை இரட்சித்ததில் ஒரு நோக்கம் இருந்தது. அவர் உன்னை இரட்சித்ததில் ஒரு நோக்கம் இருந்தது. மேலும், நான் அவருடைய சித்தத்தினாலே அவருடைய சித்தத்தை மட்டுமே செய்வேன் என்று தீர்மானித்துக் கொண்டேன். அவர் அதைச் செய்ததற்கான காரணம், அவர் ஏன் அதைச் செய்தார் என்று எனக்குத் தெரியவில்லை.

106. நான் கூறினதுபோல, “அதனுடன் சேர்க்கவோ அல்லது அதிலிருந்து எடுக்கவோ வேண்டாம்!” அப்படிச் செய்யாதீர்கள் என்று வெளிப்படுத்தல் 22:19 கூறுகிறது. அவர் நம்முடைய முற்றிலுமானதாக இருப்பாரென்றால், அது வேறுவிதமாக இருக்க முடியாது. அது வேறு விதமாக இருப்பதற்கு வழியேக் கிடையாது. அவர் அந்த முற்றிலுமானதாக, இறுதியான வார்த்தையாக இருக்க வேண்டும்

107. நான் இரட்சிக்கப்பட்ட பொழுது பல லட்சக் கணக்கானவர்கள் பாவத்தில் இருந்தனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் என்னை இரட்சித்ததில் அவருக்கு ஒரு நோக்கம் இருந்தது. அநேக சமயங்களில் சகோதரர்களுக்கு மத்தியில் நான் ஒரு விநோதமான வனாக இருக்கிறேன்; முன்குறித்தலில் விசுவாசம் வைத்துக் கொண்டு, சர்ப்பத்தின் வித்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்திலான ஞானஸ்நானம், இன்னும் அதுபோல காணப்படுகிற மற்ற எல்லா காரியங்களும்... மற்றும் அந்த தரிசனங்கள் மற்றும் கிறிஸ்துவின் வல்லமை திரும்பி வருதல் மற்றும் ஸ்தாபனங்களையும் மற்ற காரியங்களையும் கண்டனம் பண்ணுதல். நான் விநோதமானவன், ஆனால், அவர் என்னை இரட்சிக்க ஒரு காரணத்தை உடையவராயிருந்தார், அப்படிச் செய்வதற்கு ஒரு நோக்கம் இருந்தது. அன்றைக்கு லட்சக்கணக்கானவர்கள் பாவத்துக்குள் இருந்த பொழுது அவர் என்னை இரட்சித்தார், ஆனால், ஒரு நோக்கத் திற்காக அவர் என்னை இரட்சித்தார். அவர் என்னை இரட்சித்தபோது அங்கே படித்த மனிதர்களெல்லாம் இருந்தார்கள், அங்கே புத்திசாலிகள், வேத பண்டிதர்கள் இருந்தார்கள், அங்கே பேராயர்கள் மற்றும் அதிமேதா விகள் மற்றும் பலர் களத்தில் இருந்தார்கள். ஆனால், அவர் என்னை ஒரு நோக்கத்திற்காக இரட்சித்தார்.

108. மேலும், அந்த வார்த்தை முற்றிலுமானதாய் இருக்கிறதை நான் காண்கிறேன், மேலும், நான் அதனோடு கட்டப்பட்டிருக்கிறேன். நான் இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரை யேயன்றி வேறொன்றையும் அறியாதிருக்கத் தீர்மானித்து விட்டேன். அதற்கு அவருக்கு ஒரு காரணம் இருந்தது, மேலும், நான் அந்த காரணத்தை பற்றிக்கொள்ளத்

தீர்மானித்து விட்டேன். மற்றவர்கள் வேறு என்ன கூறினாலும் எனக்கு அது ஒரு காரியம் இல்லை. நான் அவர்களிடமிருந்து பிரித்துக் கொள்ளப்போவதில்லை அல்லது அவர்களை இழிவுபடுத்துகிறதில்லை,. ஆனால், நான் எதனோடு கட்டப்பட்டிருக்கிறேன் என்பதை நான் அறிவேன். நான் இவ்விதமாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர் என்னை இவ்விதமாக ஆக்கிவிட்டார். நான் ஒரு நோக்கத்திற்காக அவ்விதமாக ஆக்கப்பட்டிருக்கிறேன். நான் இதுபோன்ற எல்லா தகுதி களையும் மற்றும் அது போன்றவைகளையும் மற்றும் இதுபோன்ற கணக்கில் எடுக்கப்படாத காரியங்களையும் உடையவனாய் இருக்க வேண்டியதாயிற்று. ஏனென்றால், அப்போது அவர் அவைகளை எல்லாம் என்னிலிருந்து தோண்டி எடுத்து விட்டு வேறொன்றை அங்கே உள்ளே வைக்கும் படியாக; அதுதான் அவருடைய வார்த்தையாக இருந்தது. மேலும், நான் கிறிஸ்துவையேயன்றி வேறொன் றையும் அறியமாட்டேன் என்று தீர்மானித்திருக்கிறேன்.

109. கிறிஸ்துவின் மரணம் ஒரு முற்றிலுமானதாக இருந்தது. அது ஒரு முற்றிலுமானதாக இருந்தது. மரணத்தைக் குறித்து பயந்து கொண்டிருந்தவர்கள் எல்லோருக்கும் அவர்களுடைய எல்லா பயத்திற்கும் அது ஒரு முடிவாக இருந்தது. அப்படி என்றால், அவருடைய மரணம் ஒரு முற்றிலுமானதாய் இருக்கிறது.

110. ஜனங்கள் மரணத்துக்கு பயப்படுகிறார்கள். யோபு கூட மரணத்துக்குப் பயந்தான். ஆனால், அவன் அந்த தரிசனத்தைக் கண்டபோது! எல்லாமே போய்விட்டது என்று அவன் அறிந்திருந்தான்; அவனுடைய குடும்பம், அவனுடைய - அவனுடைய பிள்ளைகள், இன்னும் சொல்லப்போனால், அவனுடைய மனைவியும் அவனுக்கு எதிராக திரும்பிவிட்டாள். ஏனென்றால்,

அவனுடைய - அவனுடைய நாற்றம் - அவனுடைய கொப்புளங்களின் துர்நாற்றம்; அவன் தன்னுடைய வீட்டிற்கு வெளியே ஒரு சாம்பல் குவியலின் மேல் உட்கார்ந்து கொண்டு, தன்னுடைய பருக்களையெல்லாம் தேய்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய மனைவியும் "நீர் ஏன் தேவனை தூஷித்து ஜீவனை விடக்கூடாது" என்று கேட்டாள்.

அதற்கு அவன் "நீ பையித்தியக்காரி பேசுவது போல பேசுகிறாய்" என்றான். பார்த்தீர்களா?

111. அதன் பிறகு எலிகூ அவனிடம் பேசினபோது... இந்நாட்களில் ஒன்றில், எலிகூ, நான் அந்த நாமத்தை உங்களுக்காக விவரித்து மேலும், அது கிறிஸ்துவாய் இருந்தது என்று உங்களுக்குக் காண்பிக்க போகிறேன்.

112. அவன் இந்த நிலைக்குள்ளான போது, எல்லாமே அவனுக்கு எதிராக திரும்பி விட்டிருந்தபோது, அப்பொழுது, அவன் அந்த நீதியுள்ளவரைக் குறித்த தரிசனத்தைக் கண்டான். அவனுக்காக இடைவெளியில் நிற்கக்கூடிய ஒரு மனிதனை அவன் கண்டுபிடிக்க விரும்பினான்; ஒரு பாவமான மனிதன் மீதும், ஒரு பரிசுத்தமான தேவன் மீதும் தன் கரங்களைப் வைத்து, நடுவில் நின்று மத்தியஸ்தம் பண்ணக்கூடியவர். மேலும், தேவன் நான்காயிரம் வருடங்களுக்கு முன்பாகவே அதைக் காணும்படி அவனை அனுமதித்தார். அது அவனுடைய முற்றிலுமானதாய் இருந்தது. அவன் எழுந்துநின்று தன் கால்களை உதறி, "அல்லேலூயா!" என்றான்.

113. ஒரு மனிதன் மரணத்தைக் குறித்து பயப்படு கிறதான வேளையில் எழுந்து நின்று தன்னையே உலுக்கிக் கொண்டு வார்த்தையை நோக்கிப் பார்த்து,

தேவனுடைய தரிசனம் என்ன சொல்லுகிறது என்று பார்க்கக்கடவன்.

114. அவன் அந்தத் தரிசனத்தைக் கண்டான், "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக் கிறேன்" என்றான். மேலும், நான் என்னையே அதனோடு இணைத்துக் கொள்கிறேன்! இந்த என்தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தி லிருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன். நான் அதனோடு கூட என்னைக் கட்டிக் கொண்டேன்" என்று கூறினான். அவன் அதைக் கண்டான். அது தேவனுடைய ஒரு வாக்குத்தத்தமாக இருந்தது.

115. அவன் இயற்கையின் பிரமாணங்களுக்குள்ளாகப் பார்த்தான். இயற்கையின் பிரமாணத்துக்குள் இருக்கிற அந்த தொடர்ச்சியைக் குறித்து நான் உங்களுக்கு கூறிக்கொண்டிருந்தது போல, வார்த்தைக்கும் ஒரு தொடர்ச்சி இருக்கிறது. தேவனுடைய செய்கைக்கும் ஒரு தொடர்ச்சி இருக்கிறது. எல்லாமே ஒரு தொடர்ச்சியில் இருக்கிறது. யோபு 14- ல் அவன் கேட்டிருந்தான். "ஒரு மரத்தைக் குறித்தாவது நம்பிக்கையுண்டு; அது வெட்டி போடப்பட்டாலும் திரும்பத் தழைக்கும், அதன் இளங் கிளைகள் துளிர்க்கும். மனுஷனோவென்றால் மரித்தபின் ஒழிந்து போகிறான்" மனுபுத்திரன் ஜீவித்துப் போனபின் அவன் எங்கே? அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான்; அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான். ஓ, அதன் பிறகு அவன் "நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து, உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து, என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால்

நலமாயிருக்கும்'' என்றான். அவன் மரணத்தைக் குறித்துப் பயந்திருந்தான்.

116. ஆனால் அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்த படியால், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கண்ட போது, அவன், ''என் மீட்பர் உயிரோடிருக்கிறார்!'' கவனி யுங்கள், அவன் அவரை, ''மீட்பர்'' என்று அழைத்தான். கவனியுங்கள். ''என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும், என் தோல் புழுக்கள் இந்தச் சரீரத்தை அழித்த பின்பும், நான் என் மாம்சத்திலிருந்து தேவனைக் காண்பேன்'' என்றான். தேவனும் மீட்பரும் ஒன்றாயிருந்தனர், தேவனும் மனிதனும் ஒன்றாயிருந்தனர். ''நான் தேவனைக் காண்பேன்; அவரை நானே காண்பேன், என் கண்கள் காணும், அந்நிய கண்கள் அல்ல'' என்றான். ஆமென்.

117 அந்த மீட்பர் தேவனைத் தவிர வேறு யாருமில்லை, அவரையே என் கண்கள் பார்க்கிறது. அவர்தான் முற்றிலுமானதாய் இருக்கிறார். அவர்தான் முற்றிலுமானவர். அவர் மரணத்தைக் குறித்த எல்லா பயத்தையும் எடுத்துப் போடுகிறார். அவர் எல்லா பயத்தையும் எடுத்துப் போடுகிறார்.

118. எபிரேயர், 2 வது அதிகாரத்தில் 14 மற்றும் 15 வசனங்களைக் கவனியுங்கள், அவர் மனுஷ சாயலை எடுத்துக் கொண்டார். எல்லோருக்காகவும் மரிக்கக் கூடிய ஒரே நபராக இருக்கும்படிக்கு, அவர் ஒரு மனுஷ சாயலை எடுத்துக் கொண்டார். அந்த மீட்பர் இறங்கி வந்து ஒரு மனிதனானார். அந்த ஒரே மனிதன் எல்லா மனிதருக்காகவும் மரிக்க முடிந்தது. ஓ, அவர் அதை எப்படிச் செய்தார்? தேவன் எதற்காக மனிதனானார்?

மனிதனுக்கான தண்டனையின் கிரயத்தைச் செலுத்து வதற்காக.

119. ஆனால், ஈஸ்டர் காலையில், அவர் மரணம், நரகம் மற்றும் கல்லறையின் திறவுகோலோடு வந்தார். ஆமென். சிலுவையில் மரிக்க முடிந்த தேவனை, கல்லறைகளால் அவரைப் பிடித்து வைக்க முடிய வில்லை; எதுவுமே அவரைப் பிடித்து வைக்க முடிய வில்லை. நரகத்தாலும் அவரைப் பிடித்து வைக்க முடிய வில்லை. ஒன்றுமே அவரைப் பிடித்து வைக்க முடிய வில்லை. அவர் உயிர்த்தெழுந்தார். அவர் திறவுகோல் களை உடையவராயிருந்தார். அவர் ஒரு ஜெயவீரராக உயிர்த்தெழுந்தார். ஏனென்றால், அவர் மரணத்தையும், நரகத்தையும், பாதாளத்தையும் வென்றார். அவர் பூமியில் இருந்தபொழுது அவர் வியாதிகளை ஜெயித்தார். அவர் எல்லாவற்றையும் ஜெயித்தார். அவர் மூடநம்பிக்கைகளை ஜெயித்தார். அங்கே ஜெயிக்கப்பட வேண்டிய ஒவ்வொன்றையும் அவர் ஜெயித்தார். மேலும், மரணம், நரகம் மற்றும் பாதாளத்தின் திறவுகோலோடு கூட அவர் அங்கே வந்தார். அவருடைய பக்கவாட்டில் திறவு கோல்கள் ஒலிக்கின்றன; அப்படியே உன்னதத்திற்கு ஏறிச் சென்று, மனிதருக்கு வரங்களை கொடுத்தார். அதன் பிறகு பெந்தெகொஸ்தே நாளிலே மீண்டுமாக திரும்பி வந்து அந்த திறவுகோல்களை பேதுருவினிடத்தில், சபையினிடத்தில் ஒப்புவித்தார். ஆமென். அவரே நம்முடைய முற்றிலுமானதாய் இருக்கிறார். எல்லா மரண பயங்கள்... அவர் பிழைக்கிறபடியால், நாமும் கூடப் பிழைக்கிறோம்.

120. ரோமர் 8:1, “இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்

தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.'' நாம் அதை கண்டுபிடிக்கிறோம், அது ரோமர் 5 என்று நாம் கண்டறிகிறோம். மேலும் – மேலும், அவர் நம்முடைய நீதிமானாகுதலாய் இருக்கிறார், நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாகும்படிக்கு, தேவன் அவரை மூன்றாவது நாளிலே எழுப்பினார். அதாவது, நம்முடைய விசுவாசத்தை நீதியுள்ளதாக்க அவர் அவரை எழுப்பினார். அப்படி என்றால் அவர் என்ன செய்கிறார்? மேலும், நம்முடைய விசுவாசம் அதை விசுவாசிக்கிற படியால், அந்த நீதிமானாக்குபவரை அவர் திரும்ப அனுப்பினார். நாம் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கிற காரணத்தினால், நம்முடைய நீதிமானாக்கப்படுதலுக்காக பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்து, அதற்குள் வருகிறார். இப்பொழுது நாம் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாயிருந்து, கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதங்களில் வீற்றிருந்து, அவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் நாம் நீதிமான் களாகப்பட்டிருக்கிறோம்.

121. இரட்சிப்பின் அச்சாரம் இப்பொழுது நமக்குள் இருக்கிறது என்றும், கிறிஸ்துவின் அதே ஜீவன் நமக்குள் துடித்துக் கொண்டிருக்கிறது என்றும் அறியும் பொழுது, அதுவே நமக்கு அந்த நீதிமானாக்கப்படுதலை கொடுக் கிறது. அப்படி இருக்கும் பொழுது எப்படி நாம் அந்த வார்த்தையை மறுதலிக்க முடியும்? அதாவது, அவரே நமக்கு அந்த நிச்சயத்தை கொடுக்கிற வார்த்தையாக இருக்கிறார். அந்த பரிசுத்த ஆவி இங்கே இருக்கிறார். அது என்னவாய் இருக்கிறது? அது இன்னுமாக அந்த வடக்கு நட்சத்திரமாக இருக்கிறது. கிறிஸ்துவே அந்த வடக்கு நட்சத்திரமாக இருக்கிறார். மேலும், பரிசுத்த ஆவியானவரே அந்த விசுவாசியை அந்த வடக்கு

நட்சத்திரத்துக்கு நேராகச் சுட்டிக்காட்டுகிற நீதிமானாக்கப்படுதலாய் இருக்கிறார். சரி.

122. பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதுமே வார்த்தைக்கு தான் சுட்டிக்காட்டுவார். அது ஒரு கோட்பாட்டை அல்லது ஸ்தாபனத்தை சுட்டிக்காட்டு மானால், அது பரிசுத்த ஆவியே அல்ல. அந்த வார்த்தையை உறுதிப்படுத்தும் படியாகவும், அந்த வார்த்தையை ஒரு நேர்மறையாக்கும்படியாகவும் அவர் மரித்த போது, தம்முடைய வார்த்தையை விட்டுவிலகி வேறொன்றை அவரால் சுட்டிக்காட்ட முடியாது, அவரால் அதைச் செய்ய முடியாது. ஆமென். அவரே அந்த வார்த்தைக்குள் வரத்தக்கதாக அவர் மரித்தார். அந்த வார்த்தையை மீண்டும் ஜீவிக்கச் செய்கிற அந்த உயிர்ப் பிக்கும் ஜீவனாயிருக்கிறார். அதுதான் அவருடைய மரணத்தின் நோக்கமாய் இருந்தது. ஏனென்றால், இன்னுமாக அவர் தம்முடைய சபையின் மூலமாக தம்மை எடுத்துக் காண்பித்து, ஒவ்வொரு வார்த்தை யையும் ஒவ்வொரு காலத்தினூடாகவும் அது செயல்பட வேண்டியவிதமாகவே சரியாகச் செயல்படுத்துகிறார்.

123. அவரே சபையாகிய இயந்திரத்தின், இயக்கு சக்தியாய் இருக்கிறார். அது என்ன? அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், அது போன்றவர்கள். மேலும், அவரே அதை (சபையை) செயல்படுத்துகிற இயக்கு சக்தியாய் இருக்கிறார். மேலும், அது ஒரு குறிப்பிட்ட இயக்கு சக்தியினால் இயக்கப்படுகின்றதைப் போன்று... அவர், அந்த எரிபொருளை எரிய செய்யும் அக்கினிப் பொறியாக இருக்கிறார். அவர் அந்த கனர்ச்சி கலனுக்குள்ளாக (எரிபொருளும் காற்றும் கலக்கப்படுகிற ஒரு கலன்) எரிபொருளை எரிக்கிற நெருப்புப் பொறியாக இருக்கிறார். வார்த்தை அந்த கனர்ச்சி கலன் மீது

ஊற்றப்படுகிறது, அவர்தான் அதை அனல் மூட்டுகிறார். அவர் ஒருவரே அதை உறுதிப்படுத்துகிறார். அவர்தான் உயிர்த்தெழுதலின் வல்லமையாய் இருக்கிறார். அவர் தான் தேவன். அவர்தான் அந்த அக்கினியாய், அந்தவிதமாகவே அவர் இருக்கிறார்.

124. 1 தீமோத்தேயு 3:16 கூறுகிறது, “அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், தேவதூதர்களால் காணப் பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்” அவர் தேவனாயிருந்தார், அவர் பாவிகளுடைய இடத்தை எடுத்துக்கொள்ள வந்த தேவனாக இருந்தார். ஆம், ஐயா. மேலும், மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பினபோது, அவர் நம்முடைய நீதிமானாக்கப் படுதலாக இருந்தார். ஆகையால், உன்னதமானவருடைய வலது பாரிசத்துக்கு அவர் உயர்த்தப்பட்டு, நாம் நம்முடைய பலவீனங்களை அவரிடத்தில் அறிக்கை செய்து நமக்கு நாமே மரிக்கும் பொழுது; நம்முடைய பலவீனங்களின் நிமித்தம் நமக்காகப் பரிந்து பேசுகிற ஒரு மத்தியஸ்தராக இருக்கிறார், வாக்குத்தத்தமாகிய அந்த வார்த்தையை திரும்ப நமக்குள்ளே வைக்கிறார். மேலும், நம்முடைய விசுவாசமானது அந்த வார்த்தையை ஜீவிக்கச் செய்கிறது. ஏனென்றால், கிறிஸ்து நம்மில் வார்த்தையை உயிர்ப்பிக்கிறவராய் இருக்கிறார்.

125. எல்லா வாக்குவாதங்களும், விவாதங்களும் முற்றுப் பெறுவதைக் காண முடிந்தால் நலமாயிருக்கும்! எவ்வளவாய் நான் வாஞ்சிக்கிறேன்! அதுவே உச்ச நீதிமன்றமாக இருக்கும். அதுதான் வடக்கு நட்சத்திரம். அல்லேலூயா! அதுவே எல்லா விவாதத்துக்கும் முடிவாய் இருக்கிறது. அதுவே எல்லா கேள்விகளுக்கும் முடிவாய்

இருக்கிறது. அது ஒவ்வொன்றுக்கும் முடிவாய் இருக்கிறது. தேவன் அப்படிச் சொன்னார். அதுதான் முற்றிலுமானது. அதனோடு கூட உங்களை அதனோடு இணைத்துக் கொள்ளுங்கள். பவுல் "நிகழ்காரியங்களா னாலும், வருங்காரியங்களானாலும், மரணமானாலும், வியாதியானாலும், நிர்வாணமானாலும், கொள்ளை நோயானாலும் அதினின்று எதுவும் நம்மை பிரிக்க மாட்டாது." நாம் ஒரு முற்றிலுமானதோடு நம்மை கட்டிக் கொள்கிறோம். "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்றார். அதைத் தவிர வேறு எதுவும் என்னைப் பிரிக்க மாட்டாது. அதுவே முற்றிலுமானதா யுள்ளது

126. அவர் நம்முடைய முற்றிலுமானவராய் இருக்கிறார். ஏனென்றால், நமக்கு உயிர்த்தெழுதலின் நிச்சயம் இருக்கிறது. ஏனென்றால், அவர் நமக்குள் உயிர்த்தெழுந்திருக்கிறார். நாம் எப்படி அறிவோம்? அவர் ஜீவிக்கிறார். அவர் இந்த பூமியில் இருந்த பொழுது எவைகளை செய்தாரோ அவைகளை அப்படியே சரியாக இங்கே செய்கிறார். அவர் அதே அக்கினி ஸ்தம்பமாக இருக்கிறார், அதனுடைய புகைப்படம் கூட நம்மிடம் இருக்கிறது. அவர் சபையில் அதே நபராக இருக்கிறார். அவர் இன்று இங்கே இருக்கிறார், இந்த சரீரத்தில் இருந்து கொண்டு அன்றைக்கு எப்படி கிரியை செய்தாரோ அதேபோல சரியாக இப்பொழுதும் கிரியை செய்கிறார்.

127. ஒருவேளை ஒரு தர்பூசணி கொடியின் ஜீவனானது ஒரு பூசணிக்குள்ளாக வைக்கப்படுமென்றால் அது இனி ஒருபோதும் பூசணிக்காயை விளையச் செய்யாது. அதனால் முடியாது. ஏனென்றால், அது தர்பூசணியாக இருக்கும். ஏனென்றால், அதற்குள்

இருக்கிற ஜீவன் தர்பூசணியினுடைய ஜீவனாய் இருக்கிறது. “மேலும், ஒரு வேளை என்னுடைய... நீங்கள் என்னிலும், என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால், அப்பொழுது, நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்” நீங்கள் தர்பூசணி பழங்களைப் பெற்றுக் கொள்வீர்கள். ஆமென். அந்த முற்றிலுமானது, அது சத்தியம் என்று எனக்குத் தெரியும். நான் என் ஆத்துமாவை அதனோடு இணைத்துள்ளேன், மேலும், அது சத்தியம் என்பதை நான் அறிவேன். தேவனுடைய வார்த்தை. அவரே நம்முடைய முற்றிலுமானவர்.

128. 2 தெசலோனிக்கேயர் 2 - ஆம் அதிகாரம், (1தெசலோனிக்கேயர் 4:16) நாம் அதை வாசிக்கலாம். “பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.” ஓ, எப்படியாக என் இருதயம் இந்த புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் ஏற்றபடி துடிக்கிறது. ஆமென். தேவன் “நமக்கு அன்பானவர்களை சந்திக்கும்படியாக நாம் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம்” என்றார். ஆமென். அந்த வார்த்தையை என் இருதயத்தின் ஆழத்தில் வைத்துக் கொள்ளுகிறேன். ஏனென்றால், அந்த வார்த்தை அங்கே உள்ளது.

129. நான் உமக்கு விரோதமாய் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன். நான் அவைகளை என் விரல்களிலும், என் கட்டிலின் தலைமாட்டிலும் கட்டிக் கொள்கிறேன். நீர் எப்போதும் எனக்கு முன்பாக இருக்கிறீர். நான் அசைக்கப்படுவதில்லை என்றான்.

130. "ஆம், நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும், பொல்லாப்புக்கு பயப்படேன். ஏனென்றால், நீரே என் முற்றிலுமானதாய் இருக்கிறீர். நான் அவைகளின் ஊடாகச் செல்லுவேன், ஆனால், நீர் என்னை அங்கிருந்து வெளியே இழுத்துக் கொண்டு வருவீர். நான் என் கப்பலை ஆழ் கடலுக்குள்ளாக செலுத்துவேன், நீரே... நீரே என்னுடைய நங்கூரமாய் இருப்பீர். ஆமென். நீர் அங்கே திரைக்குப் பின்னால் இருக்கிறீர். அந்த கடல் கொந்தளிப்பினூடாக என்னுடைய சுக்கானை பிடித்து இயக்குகிறவர் நீராகவே இருக்கிறீர். நீர் தான் அங்கே இருக்கப் போகிறவர். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும், என்னுடைய நங்கூரம் மகிமையில் பாய்ச்சப்பட்டிருக் கிறது. நான் யோர்தான் நதியண்டையில் வந்து, நான் அதை கடக்க நேரிட்டாலும், அவரே என் முற்றிலுமான தாய் இருக்கிறார். நான் அக்கரையில் இருக்கிற அந்த உயிர்த்தெழுந்தவரோடு கூட என்னை சேர்த்து கட்டிக் கொள்கிறேன், அவர் அந்த ஆபத்தான தண்ணீர்களுக் குள்ளாக இருந்து என்னை வெளியே இழுத்து விடுவார், "நான் பொல்லாப்புக்கு பயப்படேன், தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்" ஆமென். புயல் கொந்தளிக்கட்டும், ஜீவனோ, மரணமோ அங்கே எது நேரிட்டாலும்; எதுவும் என்னைப் பிரிக்கப் போவதில்லை. நான் அந்த கம்பத்தில் கட்டப்பட்டிருக்கிறேன்.

131. அந்த கம்பம் தாங்கிப் பிடிக்கிறது. அது திரைக்குள்ளாக பாய்ச்சப்பட்டிருக்கிறது. அது நங்கூர மிட்டிருக்கிறது. அது அக்கரையில் உள்ள தேவனோடு நங்கூரமிட்டிருக்கிறது. அது என் இருதயத்திற்கு எதிராக நங்கூரம் பாய்ச்சுகிறது. பரிசுத்த ஆவியானவர் அவரே அந்த வாக்குத்தத்தத்திற்கு நேராக என்னை ஏவுகிறவர்.

“நான் இருக்கிறவர்!” “இருக்கப் போகிறவர்,” “நான் இருந்தேன்” “நான் ஒரு நாளில் இருப்பேன்” என்று அல்ல. “நானே உயிர்த்தெழுதலும், ஜீவனமாயிருக் கிறேன்” என்று கர்த்தர் சொல்லுகிறார். என்னை விசுவாசிக்கிறவன் அவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரியாமலுமிருப்பான்.”

132. மரணம் அது என்ன வேண்டுமானாலும் செய்யட்டும், அது என்னை தொந்தரவு படுத்தப் போவதில்லை. ஏனென்றால், நான் உறுதியாக நம்பியிருக் கிறேன், மரணமே என்னை எடுத்துப் போட்டாலும் அல்லது ஒரு துப்பாக்கியிலிருந்து புறப்படும் தோட்டா என்னை எடுத்துப் போட்டாலும், அது என்னவாய் இருக்கும் என்று எனக்குத் தெரியாது. அது என்ன வித்தியாசத்தை எனக்கு உண்டுபண்ணுகிறது? “கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்” ஓ என்னே! ஏனென்றால், நான் தீர்மானித்து விட்டேன், மரணம் என்னும் நதிக்கரையில் அவர் வீற்றிருக்கிறார் என்பதை நான் அறிந்திருக்கிறேன் என்றும், என்றோ ஒரு நாள் அவர் என்னை அவருடைய பிரசன்னத்திற்குள்ளாக இழுத்துக் கொள்வார். சிலுவையின் மேல் மரித்த அவருடைய மரணத்தை நான் ஏற்றுக்கொண்ட படியினால், அவருடைய நீதியினால் நான் நீதிமானாக்கப் பட்டிருக்கிறேன், தேவன் நமக்குள் மாம்சமாகி இருக்கிறார்; இன்னுமாக நமக்குள் மாம்சமாக இருக்கிறார், இன்னுமாக நம்முடைய மாமிசத்தில் ஆவியாய் இருக்கிறார். ஆமென்.

133. அவர் என் முற்றிலுமானவராய் இருக்கிறார். அவர் என் எல்லாமுமாய் இருக்கிறார். அதற்குப் புறம்பான எந்தக் காரியத்தையும், நான் என்னுடைய

கரங்களில் கொண்டு வரவில்லை. சிலுவையில் அறையப் பட்ட கிறிஸ்துவைத் தவிர வேறொன்றையும் நான் அறியேன். கிறிஸ்துவையும், சிலுவையில் அறையப்பட்ட அவரையும் தவிர வேறெதையும் கேட்க விரும்ப வில்லை. என்னுடைய இருதயம் அவருடைய ஒவ்வொரு வாக்குத்தத்தங்களுக்கும் "ஆமென்" என்று கூறுகிறது. ஆகையால்தான் அவருடைய பரிசுத்த ஆவியானவர் என்னுடைய திசைகாட்டும் கருவியாக இருக்கிறார் என்று நான் அறிந்திருக்கிறேன். அது என்னை வார்த்தைக்கு நேராக வழி நடத்துகிறது.

134. வார்த்தையின்படி எது சரியாய் இருந்ததோ அதையேயன்றி வேறெதையும் ஒருமுறை கூட அந்த தரிசனங்கள் எனக்குச் கூறியதில்லை. ஓ, சகோதரனே, அங்கேதான் நான் என்னுடைய உறுதிப்பாட்டை பெற்றுக் கொண்டேன். அன்றிரவு அதைக் குறித்து அவர் என்னிடம் கூறினபோது, நான் அந்த தரிசனங்களைக் கவனித்தேன். மேலும், நான் உங்கள் கவனத்தை கோருகிறேன், அந்த தரிசனங்கள் எப்பொழுதாவது வார்த்தைக்கு முரணானதை கூறியுள்ளதா? அது ஒருபோதும் தவறாக இருந்ததில்லை. ஏன்? அது தேவன். அதுதான் என்னுடைய இணைப்புக் கம்பமாய் உள்ளது.

135. மேலும், நான் அறிந்திருக்கிறேன், ஒரு காலை, ஒரு தரிசனத்தில், ஆற்றுக்கு அப்பால் அக்கறையில் எனக்கு அன்பானவர்களை நான் கண்டேன். அது அங்கே இருக்கிறது. நான் அந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குரியவன். ஒரு நாளில் நான் அங்கே போய் சேர்ந்தாக வேண்டும். ஆம், நிச்சயமாக.

136. அவரே என் முற்றிலுமானவராய் இருக்கிறார். அவரே என் சூரியனாய் இருக்கிறார். அவரே என் ஜீவன். அவரே என் இணைப்புக் கம்பம், என்னுடைய

வடக்கு நட்சத்திரமாக இருக்கிறார். என்னவாக எல்லாம் இருக்க வேண்டும் என்று என்னால் எண்ணக் கூடுமோ, அதுவாக எல்லாம் அவர் எனக்கு இருக்கிறார். அவர் என் ஜீவனாய் இருக்கிறார்.

137. ஸ்தாபனங்கள், என்னைப் பொறுத்தவரை... நான் உங்கள் உணர்வுகளைப் புண்படுத்தவில்லை; நான் அப்படிச் செய்ய விரும்பவில்லை. ஆனால், வார்த்தை என்பது இருபுறமும் கருக்குள்ள ஒரு பட்டயம் போல இருக்கிறது. அது வெட்டாமல் திரும்பி வர முடியாது. பாருங்கள்! குறிப்பாக அது அந்தக்காரத்தில் வெட்டும் பொழுது, கவனியுங்கள், ஸ்தாபனங்கள் மற்ற நட்சத்திரங் களைப் போல இருக்கின்றன. அவை உலகத்தின் மாற்றங் களுக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்கின்றன. அதுசரி. உலகமானது எந்த பக்கமெல்லாம் போகிறதோ அந்த பக்கமெல்லாம் அவர்கள் செல்கின்றனர், அவர்கள் தங்கள் ஸ்திரீகளை தலைமயிரை கத்தரித்துக் கொள்ள வும், குட்டைக்கால் சட்டைகளை அணியவும், மற்ற எல்லா காரியங்களைச் செய்யவும் அனுமதிக்கிறார்கள், அது அப்படியே ஹாலிவுட்டுக்கு ஏற்ற விதமாகவும், இன்னும் மற்ற எல்லாவற்றுக்கும் ஏற்ற விதமாகவும் இடம்பெயறுகிறது. ஆனால், ஓ, சகோதரனே, அது இன்னுமாக சத்தியமாகவே நிலைத்திருக்கிறது. அந்த அசைக்க முடியாத ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை இன்னுமாக சத்தியமாகவே நிலைத்திருக்கிறது. அதுவே என்னுடைய முற்றிலுமானதாய் இருக்கிறது. அது என்ன சொல்லுகிறதோ அதுவே சத்தியமாய் இருக்கிறது. ஸ்தாபனங்கள் தங்கள் இஷ்டம் போல எங்கு வேண்டு மானாலும் இடம்பெயர்ந்து செல்லட்டும். அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை ஒரு பட்டப் பெயரினால், இழிவுபடுத்த விரும்புகிறார்கள், அது அவர்களைப்

பொறுத்தது. நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமும் மனுஷருக்குக் கட்டளையிடப்படவும் இல்லை.'' என்னைப் பொறுத்தவரையில், அதுவே அஸ்திபாரமான வார்த்தையாயுள்ளது, அங்கேதான் மூலைக்கல் உள்ளது. நான் எந்த ஸ்தாபனத்தோடும் சேர்ந்து மாற்றிக் கொள்ள விரும்பவில்லை.

138. நான் என்னுடைய திசைகாட்டும் கருவியை இங்கே எனக்குள் பெற்றிருக்கிறேன். அந்த பரிசுத்த ஆவியானவர், என்னை சரியான முற்றிலுமான நிலைக்குச் சுட்டிக்காட்டுகிறார். ஏனென்றால், வானமும் பூமியும் ஒழிந்து போகும் ஆனால், என் வார்த்தைகளோ ஒருக்காலும் ஒழிந்து போவதில்லை. மேலும், நான் அதை என் இருதயத்துக்குள் மறைத்து வைத்தேன். பரிசுத்த ஆவியானவர் சரியாக அதற்குள் என்னை சுட்டிக் காட்டினார். நான் அதையே அன்றி வேறொன்றையும் அறியாதிருக்க தீர்மானித்திருக்கிறேன். அதுவே என் முற்றிலுமானதாய் இருக்கிறது. அது அவ்விதமாக இருக்க விட்டு விடுங்கள். அது அவ்விதமாகத்தான் இருக்க நான் விரும்புகிறேன். ஓ, என்னே! இப்பொழுது, சகோதரனே, சகோதரியே நீங்களும் அவருக்குள் உங்கள் முற்றிலு மானதை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ஆம், ஐயா.

139. சமீபத்தில் இங்கே எனக்கிருந்த இக்கட்டான நேரத்தில், மனைவியை இழந்து, பிள்ளைகள் மற்றும் எல்லாவற்றையும் இழந்துவிட்டேன். அப்பொழுது, யாரோ ஒருவர் என்னிடம், "நீங்கள் உங்களுடைய மார்க்கத்தைக் கடைபிடித்தீர்களா?'' என்று கேட்டார்.

140. அதற்கு நான் "இல்லை அதுதான் என்னைக் காத்துக் கொண்டது'' என்றேன். பார்த்தீர்களா? பாருங்கள், ஒருநாளில் நான் அவர்களை எல்லாம் மீண்டும்

காண்பேன் என்று அறிந்து கொள்ளத்தக்கதாக எனக்கு ஒரு முற்றிலுமானது இருந்தது, ஆமென். எனக்கு மாத்திரம் அந்த முற்றிலுமானது இருந்திராவிட்டால், என்னால் அந்த தீர்மானத்தை எடுத்திருக்க முடியாது. அதுதான் எனக்குள் அந்த வித்தியாசத்தை உண்டு பண்ணினது, அங்கேதான் நான் கட்டப்பட்டிருந்தேன், ஏனென்றால், நான் அவர்களையெல்லாம் ஒரு நாளில் மீண்டும் காண்பேன் என்று அறிந்திருந்தேன்.

141.இப்பொழுது, கிருபையினாலே “நான் இருந்தேன்” என்பவரோடு அல்ல “நான் இருக்கிறேன்” என்று கூறின வரோடு நான் கட்டப்பட்டிருக்கிறேன். “நான் இருக் கிறேன்” என்றென்றும் - என்றென்றும் பிரசன்னராக இருப்பவர், சர்வ - சர்வ வியாபி, சர்வ - சர்வ வல்லமை யுள்ளவர், முடிவற்றவர், அதாவது, அவர் “நான் இருந்தவர்” என்பதாய் இல்லை “நான் இருக்கிறவர்” அவர் இன்னுமாக உயிர்த்தெழுதலாய் இருக்கிறார். அவர் இன்னுமாக வடக்கு நட்சத்திரமாக இருக்கிறார். அவர் இன்னுமாக எனக்கு எல்லாமுமாக இருக்கிறார்.

142. மோசேக்கு ஒரு முற்றிலுமானது இருந்தது. அவன் அந்த எரிகிற முட்செடியைக் சந்தித்தபோது, அது அவனுக்கு ஒரு முற்றிலுமானதாய் இருந்தது. அப்பொழுது யோசுவா - யோசுவா..

143. ஓ, உங்களுக்குத் தெரியும், சில நேரங்களில் நீங்கள் ஒரு முற்றிலுமானதை எடுத்துக்கொள்ளும் பொழுது, ஒரு முற்றிலுமானது உங்களால் நம்ப முடியா தது ஆனால், அது உண்மைக்கு உங்களை வழிநடத்தும். அதுசரி. ஆம். ஒரு நம்ப முடியாதது ஆனால், உண்மை, அது உண்மையான ஒன்றாய் இருக்கிறது. ஆனால், அது விவரிக்க முடியாதது. ஆனால், அது ஒரு நம்பமுடியாத உண்மையாய் இருக்கிறது.

144. யோசுவா அங்கே நின்று கொண்டு, அவனுக்கு ஒரு தேவை இருந்ததை அவன் கண்டபோது, தேவன் அவனுக்கு அங்கே போய் அந்த தேசத்தை கைப்பற்றும் படி அவனுக்குக் கட்டளையிட்டிருந்தார். அந்த ஜனங் களையெல்லாம் விரட்டிவிட்டு, அந்த தேசத்துக்குள்ளாக இஸ்ரவேல் ஜனங்களை கொண்டு வந்தான். ஆனால், ஒரு நாள் எதிரிகள் அந்த தேசத்துக்குள் வேர்கொண்டு விட்டனர். மேலும், முதலாவது காரியம் உங்களுக்குத் தெரியும் அவன் அவர்களை ஏற்கனவே விரட்டி அடித்திருந்தான், அவன் அவர்களோடு தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்தான், அவன் அப்படியாக செய்து கொண்டிருந்தபோது சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தது. யோசுவா அந்த முற்றிலுமானதோடு கூட, அந்த தேவனுடைய வார்த்தையோடு கூட, அந்த சிருஷ்டிகரோடு கூட தன்னைக் கட்டிக்கொண்டிருந்தான். அவன் செய்ய வேண்டிய ஒரு வேலையோடு கூட அவன் தன்னைக் கட்டிக்கொண்டிருந்தான். ஆமென்.

145. சில நேரங்களில் அதைச் செய்வது இனிமை யானதல்ல; நீங்கள் உணர்வுகளைப் புண்படுத்த வேண்டும், வெட்டவும், துண்டிக்கவும் வேண்டும். ஆனால் அது ஒரு முற்றிலுமானதாயுள்ளது.

146. அவனுக்கு தேவை இருந்தது. அவன் "சூரியனே நீ அந்த பக்கமாக நில், சந்திரனே நீ இந்த பக்கமாக அப்படியே தொங்கிக் கொண்டிரு" என்றான். மேலும், இருபத்து நான்கு மணி நேரத்திற்கு அது அப்படியே நின்றது. ஓ, நம்ப முடியாதது ஆனால், அது உண்மை என்பதைக் குறித்துப் பேசுகிறோம். ஆனால், அவன் ஒரு முற்றிலுமானதோடு கட்டப்பட்டிருந்தான். ஒரு கட்டளை யோடு கூட, ஆம், உண்மையாகவே தேவன் அவனுக்குக் கட்டளையிட்டிருந்தார்.

புறா அவர்மேல் வரும்போது, அவன் அதைக் காண் பான் என்று யோவான் நிச்சயமுடையவனாயிருந்தான்.

147. நான் அந்த அக்கினி ஸ்தம்பத்தை கண்டபோது, தமஸ்குவுக்குப் போகிற வழியில் சென்று கொண்டிருந்த அந்த பவுலை போல, அது தேவனுடைய முற்றிலுமானது என்பதை நான் அறிந்திருந்தேன். அங்கே ஒரு எழுப்பு தல் வந்து கொண்டிருந்தது என்றும், அது தேசத்தின் ஊடாக கடந்துசெல்ல வேண்டியதாய் இருந்தது என்றும், அது இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்கு முன்னோடியாக இருக்கும் என்றும், அது ஒரு முற்றிலு மானதாய் இருக்கிறது என்றும் நான் அறிந்திருந்தேன். மேலும், நான் அதை இன்று வரை விசுவாசிக்கிறேன். அது என்னுடைய முற்றிலுமானதாய் இருக்கிறது. அது நம்ப முடியாதது ஆனால், உண்மையாக இருந்த போதிலும், நிச்சயமாக அது நம்பமுடியாத உண்மையாக இருந்தது. ஒரு அக்கினி ஸ்தம்பமானது வானத்திலே அங்கே தொங்குவது என்பது அது உண்மையாகவே நம்ப முடியாத உண்மை. மேலும், பத்திரிகைகளும் மற்ற எல்லாமும் அதனுடைய புகைப்படங்களை எடுத்து பிரசுரித்தன.

148. அன்றொரு நாள், அது நம்ப முடியாத உண்மையாய் இருந்தது, மார்ச் மாதம் 15 ஆம் தேதி அல்லது மே 15, நான் நினைக்கிறேன்... இல்லை கடந்த ஆண்டு மார்ச் 15ம் தேதி. ஐயன்மீர், இது என்ன சமயம்? என்ற செய்தி பிரசிங்கப்படுவதற்கு ஒரு மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு முன்பாக. நாங்கள் அங்குச் செல்வோம் என்று கூறினபோது, "ஏழு தூதர்கள் சந்திப்பார்கள், திரும்பி வரும்போது, ஏழு முத்திரைகளின் புத்தகம் திறக்கப்படும்" என்றார். மேலும், சகோதரன் ஃபிரட் சாத்மன் சரியாக அங்கே நின்று கொண்டிருந்தார்.

அவர் அதற்கு "ஆமென்" என்று சொன்னார். அங்கே அவருக்கு பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன், ஏன்? நான் அவர்களிடத்தில், "ஒரு பெரிய சத்தம் உண்டாகும் என்றும் அது இந்த முழு தேசத்தையும் அசைக்கும்" என்று கூறினேன். மேலும், நான் அது அங்கே இருக்கும், அது "**கர்த்தர் உரைக்கிறதாவது**" என்றேன். அது ஒலிநாடாக்களில், ஒலிநாடாக்களில், ஒலிநாடாக்களில் இருக்கிறது. ஃபீனிக்ஸ் -ல் துவங்கி அப்படியே அந்த பகுதி முழுவதும். அது "கர்த்தர் உரைக்கிறதாவது" என்பதாகும்.

149. ஒரு நாள் அங்கே நின்று கொண்டு ஊமத்தை வகையான முட்செடியை அல்லது இந்த ஊமுள்ளை என்னுடைய கால்களிலிருந்து எடுத்துக் கொண்டிருந் தேன். அங்கே ஏழு தூதர்கள் வானத்திலிருந்து இறங்கி வந்து, அங்கே வந்து அந்த இடத்தை அசைத்தனர். எந்த அளவுக்கு என்றால் ஐம்பது அல்லது அறுபது பவுண்டு எடையுள்ள பாறைகள் பெயர்ந்து உருண்டு மலைகளின் பக்கவாட்டில் சரிந்து கொண்டிருந்தன. அங்கே ஏழு தூதர்கள் நின்று கொண்டு, நான் திரும்பிச் சென்று இந்த செய்திகளை சபைக்கு கொடுக்கும்படியாக எனக்கு கட்டளையிட்டனர். அவர்கள் என்னை அங்கே ஒவ்வொருவராகச் சந்தித்து என்ன சம்பவித்தது என்று சொல்வார்கள் என்றனர். அது அதேவிதமாக சம்பவித் தது. மேலும், அவர்கள் வானத்தில் அவ்விதமாக ஏறிச்சென்றபோது, வானத்தில் முப்பதுமைல் உயரம் சென்றனர்; அதேநாளில் அவர்கள் அதை புகைப்படமாக எடுத்தனர். விஞ்ஞானம் அதை எடுத்தது, அது உலகம் முழுவதும் சென்றது. அது நம்ப முடியாதது ஆனால், உண்மையாக இருக்கிறது. ஆனால், அது முற்றிலு மானதாக இருந்தது. நான் இயேசுகிறிஸ்துவுக்குள்

என்னை இறுக்கமாக சேர்த்து கட்டிக் கொண்டேன். என் ஜீவனை அவர் மீது சுற்றி விட்டேன். அது விநோதமாக இருக்கிறது என்று எனக்குத் தெரியும். அது எப்பொழுதும் அவ்வாறே உள்ளது.

150. தமஸ்குவுக்குப் போகிற வழியில் இயேசுவை சந்திப்பது பவுலுக்கு ஒரு நம்ப முடியாதது ஆனால், உண்மையாக இருந்தது. தேவன் ஒரு பாவியினுடைய கறுப்பு இருதயத்தை தன்னுடைய சொந்த இரத்தத்தால் கழுவி வெள்ளையாக்கும்போது, அது நம்ப முடியாதது ஆனால், உண்மையாய் உள்ளது. நிச்சயமாகவே அது நம்ப முடியாதது ஆனால், உண்மை, நம்ப முடியாதது ஆனால், உண்மை அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? மேலும், அந்த நம்ப முடியாத உண்மை. அது ஒரு வேளை தேவனுடைய வார்த்தையின்படி இருக்கும் என்றால், அதுவே உங்களுடைய முற்றிலுமானதாக இருக்க முடியும். பவுலுடைய மனமாற்றம் அது நம்ப முடியாத உண்மையாயிருந்தது, மேலும், அதுவே அவனுடைய முற்றிலுமானதாக மாறியது.

151. சில நாட்களுக்கு முன்பு, நான் ஒரு மருந்து கடைக்காரரோடு கூட உட்கார்ந்து கொண்டிருந்தை இங்கே நினைவு கூறுகிறேன், நாங்கள் ஒரு சிறிய இடத்தில் பேசிக் கொண்டிருந்தோம். அவர் “சகோதரன் பிரான்ஹாம், நான் உங்களை ஒன்று கேட்க விரும்பு கிறேன்” என்றார். மேலும், அவர் ஒரு பாப்டிஸ்டாக இருந்தார். அவர் “நீங்கள் நம்ப முடியாத உண்மையை விசுவாசிக்கிறீரா” என்று கேட்டார்.

நான் “நிச்சயமாக, நிச்சயமாகவே அதை நான் விசுவாசிக்கிறேன்” என்றேன்.

152. “நான் இதை உங்களைத் தவிர வேறு யாரிடமும் கூறமாட்டேன்” ஆனால், நீங்கள் இதை விசுவாசிக் கிறீர்கள் என்று நான் அறிவேன்” என்றார்.

153. அவர் சொன்னார் நெருக்கடி காலகட்டத்தில் அங்கே வியாதியஸ்தர்களுக்கு மருந்து வாங்குவதற்கு அவர்கள் மாவட்ட அதிகாரியிடமிருந்து ஆணையைப் பெற்றுக் கொண்டு வரவேண்டும். ஒருநாள் எங்களுடைய மருந்து கடையில் பின்னால் நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். என்னுடைய மகன் வாடிக்கை யாளர்களை கவனித்துக் கொண்டிருந்தான். நான் ஒரு பெண்மணி அங்கே வருவதைக் கண்டேன். அவள் சீக்கிரத்தில் தாயாகப் போகிறவளாக இருந்தாள். அவளால் வரிசையில் நிற்பது சற்று கடினம். அவளுடைய கணவர் மிகவும் பரிதாபமான விதத்திலே உடை உடுத்தியிருந் தான், அவர்கள் இருவருமே அப்படித்தான் இருந்தனர். அவள் அந்த கடையின் முகப்பின் மீது சாய்ந்து கொண்டு நின்று கொண்டிருந்தாள். அந்த மனிதன் என் மகனிடம் கடந்து சென்று “நான் இங்கு மருத்துவரிட மிருந்து ஒரு மருந்துச் சீட்டு வாங்கி வந்துள்ளேன்” என்றார். நீங்கள் எனக்காக அதைக் கொடுக்க வேண்டும், நான் என் மனைவியை சீக்கிரமாக வீட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றார். பிறகு “நான் அந்த பெண்மணியை வரிசையில் நிற்கவைக்க முயற்சித்தேன், அதற்கு அந்தப் பெண்மணியின் கணவர் அந்த தெருவில் நீண்ட வரிசையை திரும்பிப் பார்த்து அது எப்படியும் நான்கு அல்லது ஐந்து மணி நேரம் ஆகும். ஆனால், அவளால் அந்த வரிசையில் நிற்க முடியாது என்பதை உங்களால் காண முடியும்” என்று கூறினாராம்.

154. இந்த வாலிபன், ஐயா, என்னால் அப்படிச் செய்ய முடியாது. முதலில் வந்தவருக்கு தான் கொடுக்க

வேண்டும் இல்லையென்றால், அது முறையாக இருக்காது என்றார். மேலும் கூறினார்...

155. அந்தப் பையன் என்ன கூறுகிறான் என்று பாருங்கள், அவர் அங்கே பின்னால் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்ததாக அவனுடைய தந்தை கூறினார். மேலும் அவர், “மகனே, ஒரு நிமிடம். அது என்ன?” என்று கேட்டார்.

156. மேலும், அவர் அங்கே அந்த வயோதிக மனிதனிடத்தில் நடந்து சென்று, அந்த முதியவர் உண்மையில் ஒரு நல்ல கிறிஸ்தவராய் இருந்தார், ஒரு நல்ல வயோதிக பரிசுத்தவான். இவர், அவரிடம் “அன்பான சகோதரனே, அது என்ன?” என்று கேட்டார்.

.157. அதற்கு அவர் சொன்னாராம், “ஐயா நான், அவள் என்னுடைய மனைவி அவள் சீக்கிரத்தில் குழந்தை பெறப் போகிறாள், நான் மருத்துவரிடமிருந்து குறிப்பு சீட்டு கொண்டு வந்திருக்கிறேன், சில மருந்துகள் எனக்கு வாங்க வேண்டும், உடனடியாக அவள் அந்த மருந்தை உட்கொள்ள வேண்டும், மேலும், நான் அவளை அங்கிருந்த ஒரு அறைக்குள்ளாக காத்திருக்கச் செய்தேன், பிறகு நான் அந்த வரிசையை பார்த்தேன், என்னால் பிற்பகலுக்குள் இந்த வரிசைக்குள் கடந்து வர முடியுமா என்று சந்தேகிக்கிறேன். ஒருவேளை உங்களால் முடிந்தால் எனக்கு இந்த மருந்தை வாங்கி தர முடியுமா என்று நான் எதிர்பார்க்கிறேன்? நான் அந்த பக்கமாக கீழே போய் நிற்கிறேன், அந்த மாவட்ட அதிகாரி இந்த மருந்துக்காக கொடுத்த பணத்தை வேண்டுமானால் நான் உங்களுக்குத் தருகிறேன்” என்றாராம்.

158. அதற்கு அவர், “நிச்சயமாக ஐயா, நான் உங்களுக்காக அதை வாங்கித் தருகிறேன்” என்றார்.

அந்த மருந்துச் சீட்டைக் கீழே வைத்துவிட்டு பின்னால் சென்று, அவருடைய மகனை அழைத்து அவனை வரிசையில் நிற்கும்படி செய்தாராம்.

159. அந்தப் பெண்மணி இரண்டு அல்லது மூன்று முறை இதை கவனித்தாளாம். அவள் அங்கே நின்று கொண்டிருந்தாள், அவளுடைய முகமெல்லாம் வியர்த்துக் கொண்டிருந்ததாம், அதனால் அவள் மிகவும் வியாதியாய் இருக்கிறாள் என்று இவர் அறிந்து கொண்டார். அவளுடைய கணவர் அங்கே நின்று கொண்டு, தன்னுடைய கரங்களை அவளைச் சுற்றிப் போட்டுக் கொண்டு, உங்களுக்குத் தெரியுமா? தேனே, இன்னும் சற்று நேரம் பொறுத்துக் கொள், அந்த அருமையான மருந்து கடைக்காரர் நமக்காக மருந்தை வாங்கச் சென்றிருக்கிறார்'' என்றார்.

160. அவர் "என்னால் முடிந்த அளவுக்கு எவ்வளவு சீக்கிரமாக அந்த மருந்தை வாங்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அதை வாங்கிக் கொண்டு, அந்த மருந்துச் சீட்டின்படி கொடுத்தேன்'' என்றார். மேலும், அவர் "நான் அந்த மருந்தை அந்தப் பெண்மணியின் கைகளில் கொடுக்கும் பொழுது, அவர் சகோதரன் பிரன்ஹாம் நான் அந்த கைகளைப் பார்த்த பொழுது, அந்த கைகள் ஆணி கடாவப்பட்ட கைகளாயிருந்தன,'' என்றார். மேலும், அவர் "அவளுடைய நெற்றியில் முட்களைக் கண்டேன்'' என்றார். அவர் "நான் என் கண்களை மூடிக் கொண்டேன், பிறகு நான் திரும்பிப் பார்த்தேன்,'' என்றார். அவர் "அப்பொழுதுதான் நான் அதை உணர்ந்து கொண்டேன், அதாவது இந்தச் சிறியரில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்கிற வார்த்தைகளை அப்பொழுதே உணர்ந்தேன்'' என்றார்.

161. இதைச் சொன்ன பிறகு நீங்கள் இதை விசுவாசிக்கிறீர்களா என்று என்னிடத்தில் கேட்டார். அதற்கு நான், "ஐயா, என் முழு இருதயத்தோடும் அதன் ஒவ்வொரு வார்த்தையும் நான் விசுவாசிக்கிறேன்" என்றேன்.

162. அது என்ன? அவர் "அன்றிலிருந்து கிறிஸ்து எனக்கு மிகவும் அதிக அர்த்தமுடையவராகிவிட்டார். ஏனென்றால், அந்தப் பெண்மணிக்கு செய்யப்பட்டது அது ஒரு நம்ப முடியாதது ஆனால், உண்மையாக இருந்தது" என்றார். சாதாரண மக்கள் இதையெல்லாம் நம்ப மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும், அதனால் தான் "இதை உங்களிடம் சொல்ல வேண்டும் என்று நான் நினைத்தேன். ஏனென்றால், உமக்கு இதுபோன்ற அனுபவங்கள் இருக்கின்றன என்பதை நான் அறிவேன்" என்றார்.

நான், "ஆம், ஐயா. அது உண்மை" என்றேன்.

163. பரிசுத்த மார்ட்டின், அவரைக் குறித்து நான் வாசித்தது எனக்கு நினைவுக்கு வருகிறது, அவர் ஒரு வாலிப பையனாயிருந்தபோது, அவர் தேவனால் அழைக்கப்பட்டிருந்தார். அவருடைய ஜனங்கள் அஞ்ஞானிகளாக இருந்தார்கள். அவருடைய தகப்பனார் - அவர் ஒரு விதமான, ஓ, எனக்குத் தெரியவில்லை. அவர் ஒரு ராணுவ வீரர் என்று நான் நினைக்கிறேன், மேலும், அது சரி அவருடைய பையன்கள் அவர்களை பின்பற்ற வேண்டியவர்களாக இருந்தார்கள். அவர் சொன்னார்... ஒரு நாள் நகரத்தினூடாக சென்று கொண்டிருந்தாராம், அது எந்த இடம் என்று இப்பொழுது எனக்கு மறந்துவிட்டது. மேலும், அவர் ஒரு பிரெஞ்சுக் காரர் என்று நான் நினைக்கிறேன். அவர் ஒரு இடைவெளியினூடாகச் சென்று கொண்டிருந்தாராம்.

அங்கே ஒரு வயதானவர் தெருவிலே படுத்துக்கொண்டு கடுங்குளிரில் உறைந்து போய் மரிக்கும் தருவாயில் கிடந்தாராம். ஜனங்கள் எல்லாரும் அவரைப் பார்த்துக் கொண்டே அந்த மனிதனுக்கு ஒன்றுமே கொடுக்காமல் கடந்து சென்றார்களாம். மேலும், அவர் அங்கே நின்றாராம். ஆனால், ஜனங்களோ தங்களை விசுவாசிகள் என்று பெருமையாக அழைத்துக் கொள்கிறார்கள். ஆனால், அந்த வழியாக சென்றவர்கள் அந்த வயதான வரை அப்படியே தவிக்க விட்டுவிட்டு ஒன்றும் செய்யாமல் கடந்து போய் விட்டார்கள். அந்த மனிதனோ தன்னைச் சுற்றிக் கொள்ள ஏதாவது துணி கிடைக்குமா என்று அந்த உறைய வைக்கும் குளிரிலே தவித்துக் கொண்டிருந்தான் என்றார்.

164. ஆனால், பரிசுத்த மார்ட்டின் அங்கே சென்று, அவர் மனம் திரும்புவதற்கு முன்பாகவே இது நடந்தது. இப்பொழுது, அவர் தன்னுடைய சொந்த மேலங்கியை எடுத்து அதை இரண்டு பாதியாக வெட்டி அந்த பிச்சைக்காரர் மேல் ஒரு பாதியை போர்த்தி விட்டு இன்னொரு பாதியை தன் மேல் போட்டுக்கொண்டாராம். “இதோ பாதி அங்கி அணிந்த வேடிக்கையான போர் வீரன்” என்று ஜனங்கள் அவரைப் பார்த்து நகைத்தனர், பாருங்கள்! அது உங்கள் காரியங்களை வித்தியாசமாக செய்யும்படி செய்கிறது. அவருக்குள் ஏதோ ஒன்று இருந்தது, தேவன் ஒருவர் உண்டு என்று அவர் விசுவாசித்தார்.

165. அன்றிரவு, அவர் பணி முடித்து வீட்டுக்கு வந்து சற்றுநேரம் உறங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது, அவரை யாரோ எழுப்பினார்கள், அவர் கண்விழித்து பார்த்தபோது, அங்கே அவருடைய கட்டிலுக்கு அருகே இயேசு தன்னுடைய பாதி அங்கியை

அணிந்து கொண்டு அங்கே நின்று கொண்டிருந்தார். இதுதான் பரிசுத்த மார்ட்டினின் துவக்கமாயிருந்தது.

166. அது என்னவாயிருந்தது? அவர் ஒரு முற்றிலுமானதை உடையவராய் இருந்தார். அதாவது, தேவனுடைய வார்த்தை உண்மையாய் இருக்கிறது என்று. “இந்தச் சிறியரில் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்” என்கிற வார்த்தை. சகோதரனே, நான் அந்த முற்றிலுமானதோடு கட்டப்பட்டிருக்கிறேன். மேலும், நீங்கள் ஒவ்வொருவரும் அதனோடு தான் கட்டப்பட்டிருக்கிறீர்கள் என்று நான் அறிந்திருக்கிறேன்...

167. இந்த காலை வேளையில் ஒரு பீட அழைப்பை பெற்றுக்கொள்வதை விட, ஒரு அர்ப்பணிப்பின் அழைப்பை நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். நாம் இந்த முற்றிலுமானதற்கு நம்மை அர்ப்பணிப்போமாக. வார்த்தை தான் தேவனுடைய முற்றிலுமானதாய் இருக்கிறது என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவர் எப்பொழுதும் இருந்தது போல இன்றைக்கும் மாறாதவராய் இருக்கிறார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

168. இங்கே ஊழியக்காரர்கள் இருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் ஜீவியங்களை அர்ப்பணித்து அப்படியே ஒரு முற்றிலுமானதை எடுத்துக் கொள்வீர்களா? இன்றைக்கு நமக்கு என்ன தேவையாய் இருக்கிறது? இன்றைக்கு நமக்கு என்ன தேவை, ஒரு ஐக்கிய அட்டையா? அல்லது ஒரு நற்சான்றா? நமக்கு இயேசுகிறிஸ்து தான் தேவை. நாம் இன்றைக்கு ஒரு ஐக்கிய அட்டையோடு நம்மை கட்டிக் கொள்வதில்லை. நாம் இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராய் இருக்கிறார் என்கிற தேவனுடைய வார்த்தையோடு கட்டிக்கொள்கிறோம். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா?

169. இப்பொழுது, நாம் நம்முடைய காலூன்றி எழுந்துநின்று நம்முடைய ஜீவியங்களை அர்ப்பணிப் போமாக. நானும் என்னுடைய ஜீவியத்தை அர்ப்பணிக்க விரும்புகிறேன். நான் புதிதாக என்னை அவரோடு கட்டிக்கொள்கிறேன். நான் என்னுடைய கட்டப்பட்ட முடிச்சு எப்படி இருக்கிறது என்று சரிபார்த்துக் கொண்டிருக்கிறேன். நான் என்னுடைய முற்றிலுமானதை சரிபார்த்துக் கொண்டிருக்கிறேன். கர்த்தாவே, உம்முடைய வார்த்தையைத் தவிர வேறு ஏதாவது எனக்குள் இருந்தால், அதை வெளியே எடுத்துப் போடும். எனக்கு உம்மைத் தவிர வேறொன்றும் தெரியாது. உம்மைத் தவிர வேறொன்றையும் அறிந்து கொள்ளவும் நான் விரும்ப வில்லை. இப்பொழுது, நீங்கள் ஒவ்வொருவரும் உங்களு டைய சொந்த வழியில் அப்படிச் செய்யுங்கள்.

170. கடந்த வாரம் முழுவதும் நான் உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறேன். நான் உங்களிடம் சத்தியத்தை கூறியிருக்கிறேன். அந்த சத்தியத்தை தேவன் உறுதிப் படுத்தியிருக்கிறார். அவர் அதை மீண்டும், மீண்டும் செய்திருக்கிறார். அந்த முற்றிலுமானது என்னவென்று உங்களுக்கு தெரியும். இப்பொழுது உங்களுக்கும், எனக்கும் சேர்த்து, ஸ்திரீகளாகிய நீங்கள் எல்லோரும், புருஷர்களாகிய நீங்கள் எல்லோரும், பையன்கள், பெண்கள், நீங்கள் யாராயிருந்தாலும், பாடல் குழுவின ராகிய நீங்கள் எல்லோரும், இங்கு மேலே இருக்கிற ஜனங்களாகிய நீங்கள் எல்லோரும், எல்லா இடங்களிலும் இருக்கிறவர்கள், எல்லோரும் சேர்ந்து, கீழ் தளத்தில் இருக்கிறவர்களும், அங்கே மேல்மாடியில் இருக்கிறவர் களும், சுவர்களைச் சுற்றிலும் இருக்கிறவர்களும், பின்னால் மற்ற அறைகளில் இருக்கிறவர்களும், நாம் எங்கே இருந்தாலும், நாம் இயேசுவை நம்முடைய முற்றிலுமானதாக எடுத்துக் கொள்வோமாக. ஏனென்றால்,

நாம் மரண இருளின் பள்ளத்தாக்கினூடாக கடந்து வர வேண்டியவர்களாக இருக்கிறோம். எனக்கு அவரையன்றி வேறொன்றும் தெரியாது. அவரே என்னுடைய முற்றிலு மானவராய் இருக்கிறார். ஏனென்றால், அவர் என் ஜீவியத்தில் உயிர்த்தெழுந்திருக்கிறார். மேலும், அவர் உண்மையாக இருக்கிறார் என்று நான் அறிந்திருக்கிறேன்.

171. நாம் இப்பொழுது, நம்முடைய கரங்களை உயர்த்தி ஜெபிப்போமாக. நாம் நம்முடைய அர்ப்பணிப் பின் ஆராதனையை செய்வோம்.

172. கர்த்தராகிய இயேசுவே, உம்முடைய வார்த்தை பழமையானது. அதுவே துவக்கமும், முடிவுமாக இருக் கிறது. நான் இப்பொழுது, இந்த சபையாருடன் சேர்ந்து என்னையும் புதிதாக இந்த பிரசங்க பீடத்தின் மீது இன்றைக்கு அர்ப்பணிக்கிறேன். நான் ஜீவ கூடாரமாகிய இந்த சபைக்காக ஒரு அர்ப்பணிப்பை கேட்கிறேன். எல்லா வேறுபாடுகளையும் தீர்த்து வைப்பீராக. அவை யெல்லாம் கடந்து போகட்டும். கடந்தவைகள் கடந்தவை களாக இருக்கட்டும். சுவிசேஷத்தின் ஊழியக்காரர்கள் ஏதோ ஒன்று நடக்க வேண்டும் என்ற கவலையோடு இருக்கிறார்கள். ஓ, தேவனே, நாங்கள் இந்தக் காலை வேளையிலே எங்களை வார்த்தையாகிய இயேசுகிறிஸ்து வோடு இணைத்துக் கொள்கிறோம்; மேலும், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையன்றி வேறொன்றையும் அறியாதிருக்க தீர்மானித்துள்ளோம். ஓ, வடக்கு நட்சத் திரமே, ஓ, பரிசுத்த ஆவியே, ஓ, தேவனுடைய திசை காட்டியே, இப்பொழுது, ஒவ்வொரு இருதயத்திற் குள்ளும் நீர் வருவீராக! நாங்கள் எங்களை உம்மிடத்தில் அர்ப்பணிக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

ஆமென். நல்லது, சகோதரனே.

இந்த புத்தகம் ஈரோடு, ஸ்ரீவில்லிபுத்தூர், திருப்பூர் – பாண்டியன் நகர், திருநெல்வேலி சபை விசுவாசிகளின் காணிக்கையினால் அச்சடிக்கப்பட்டது.

சகோதரன். நடந்தை ஜெயராஜ் - 9865704479

## எமது வெளியீடுகள்:

1. ஜீவன் 58–0519
2. பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை... 53–0614
3. தேவனால் அருளப்பட்ட சுகமளித்தலின் வழி 54–0719
4. குருடன் பர்திமேயு 61–0124
5. தேவன் தம்முடைய சிந்தையை... 65–0427
6. ஆவிக்குரிய புத்திரசுவிகாரம் 56–0923
7. உம்முடைய வார்த்தையின்படியே 53–0608E
8. யேகோவாவின் ஏழு கூட்டு நாமங்கள் 55–0120
9. முன்மாரியும் பின்மாரியும் 60–0303
10. அவர் அந்த வழியாக கடந்துபோக... 57–0727
11. யோசேப்பு தன் சகோதரர்களை சந்தித்தல் 56–1230
12. ஒரு வில்லிலிருந்து எய்யப்பட்ட தேவனுடைய... 56–0801
13. மன்னிக்க முடியாத பாவம் 54–1024
14. ஒரு முற்றிலுமானது 63–12–01M

15. ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு (மறுபதிப்பு)
16. ஏழு சபை காலங்களின் வியாக்கியானம் (மறுபதிப்பு)
17. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல் (மறுபதிப்பு)
18. தானியேலின் எழுபது வாரங்கள் (மறுபதிப்பு)
19. சுகமாகுதலைக் குறித்த சிந்தனைகள் (மறுபதிப்பு)

## அடுத்த வெளியீடுகள்:

1. தேவசித்தம் இல்லாமல் தேவனுக்காக ஒரு சேவை செய்ய முயற்சித்தல் 65–1127M
2. மகத்தான இளவரசனும், ராஜாவுமாகிய மெல்கிசேதேக்கு 55–0109 M
3. வில்லியம் பிரன்ஹாமின் வாழ்க்கை வரலாறு, பாகம்- 1
4. உலகம் மீண்டும் விழுந்துபோகுதல் 63–1127
5. ஒரு தீர்க்கதரிசியின் தென்ஆப்பிரிக்கப் பயணம்
6. ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை 58–1002
7. அழுத்தத்தை வெளியேற்றுதல் 63–0113M
8. இயேசு யார் ? 64–0620M
9. கிறிஸ்து கதவைத் தட்டுகிறார் 58–03–30E
10. வெளியே அழைக்கப்பட்டவன் 58–01–09


**இலவசப் பிரதிகளுக்கு:**

**சகோ. பெனியேல் எபி (கோவை)**

**போன்: +91 9047268278, 9597378278**

**website: www.wordoflife.in**

Visit The Website

Download The PDF

சகோதரர் வில்லியம் மரியன் பிரன்ஹாம் அவர்களால் பிரசிங்கிக்கப்பட்ட 1,200க்கும் மேற்பட்ட, செய்திகள் ஒலிநாடா மற்றும் புத்தக வடிவில் **www.wordoflife.in** என்ற இணையதளத்தில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இலவசமாக பதிவிறக்கம் செய்யவும், அச்சடித்துக் கொள்ளவும் இயலும்.